விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 26 புதன்கிழமை (10.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 81

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## மூவின மக்களின் அர்ப்பணிப்பாலேயே இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது

## இராணுவத்தளபதி யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

30 வருடங்களுக்குப்பின் யாழ்ப்பாண மக்கள் சுதந்திரமான வாழ்வை நோக்கி நகர்ந்திருப்பதை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நாம் பெற்ற சுதந்திரம் தமிழர், சிங்களவர், முஸ்லிம் ஆகிய மூன்று இனத்தவர் களின் அர்ப்பணிப்புச் சிந்தனைகளினால் கிடைக்கப்பெற்ற ஒன்றாகும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜெகத் ஜெய சூரியா தெரிவித்தார்.

நேற்று யாழ். சிவில் நிர் வாகக் காரியாலயத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து (16ஆம் பக்கம் பார்க்க)



## உண்ணாவிரதத்தை கைவிட்டார் பொன்சேகா

(கொழும்பு)

உண்ணாவிரதத்தில் ஈடுப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா அதனைக் கைவிட்டுள்ளதாக அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவருக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசியூடாக இரண்டு மகள்மாருடனும் அழைப்பினை ஏற்படுத்துவதற்கு அவருக்கு அனுமதி வழங்கியதை அடுத்தே இந்தத் தீர் மானத்தை ஜெனரல் சரத் பொன்சேகா எடுத்துள்ளார் என அனோமா பொன்சேகா தெரிவித்தார். (ச-5)

# அரசின் விரோத செயல்களினால் சர்வதேச அழுத்தம் அதிகரிப்பு

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களினாலேயே சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் உயர்வடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. ஐ.நாவின் நிபுணர் குழு அமைப்புக்கும் ஐ.தே.க. கண்டித்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## 6ஆவது நாடாளுமன்றத்துக்காக மீண்டும் தெரிவான எம்.பிக்கள்

(கொழும்பு)

மார்ச் 9ஆம் திகதி முதல் (நேற்று) பொதுத் தேர்தல் முடியும் வரை 6ஆவது நாடாளுமன்றத்திலுள்ள சகல உறுப்பினர்களும் மீண்டும் ஒரு முறை உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதாக நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் தம்மிக கிந்துல்கொட பொலிஸ் மா அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

பதில் செயலாளர், பொலிஸ்மா அதிப ருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அரசியல் யாப்பு 70/7 பிரிவுக்கமைய மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படுவதன் காரணமாக அவர்கள் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா (16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வில் மனோ ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் நீடிப்பது தொடர்பில் நேற்று கூட்டப்பட்ட விசேட நாடாளுமன்ற அமர்வின் போது ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்.

சபை அமர்வுகள் இடம்பெற்ற வேளையில் அங்கு உரை நிகழ்த்திய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மலையகத்தில் உள்ள நாவலப்பிட்டியவில் தனது கட்சி (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்கள் உட்பட எட்டு தடுப்பு முகாம்கள் அறிவிப்பு

(கொழும்பு)

புதிதாக தடுப்பு முகாம்கள் வர்த்தமானி ஊடாக பட்டியல் படுத்தப்பட்டுள்ளமை குறித்து ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

சில இராணுவ முகாம்கள் என்ன நோக்கத்திற்காக தடுப்பு முகாம்களாக அறிவிக்கப்பட்டுள்ளனவென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இராணுவத் தலைமையகம், சாலியபுர இராணுவமுகாம், பனாகொட இராணுவ முகாம், கடற்படை தலைமையகம் உள்ளிட்ட எட்டு முகாம்கள் புதிதாக தடுப்பு முகாம் களாக வர்த்தமானியில் பட்டியலிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவடைந் (16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக 93 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியன இதற்கு எதிராக வாக்களித்துள்ளன.

விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு நாடு (16ஆம் பக்கம் பார்க்க)






## பேசும் படம்



யாழ். நகரம் (அ) சுத்தமாகிறது...

# இடம்பெயர்ந்த மக்களுக்கான மார்ச் மாத நிவாரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு பின்னர் தமது சொந்த இருப்பிடங்களுக்கு விடுவிக்கப்பட்ட மக்களுக்கும் 11.08.2006 பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்குமான மார்ச் மாதத்தின் உணவு விநியோகத்திற்கான வழங்கற்கட்டளைகள் சகல ப.நோ.கூ. சங்களுக்கும் இன்று முதல் வழங்கப்படவுள்ளது.

எனவே ப.நோ.கூ.சங்கங்கள் அன்றைய தினமே மார்ச் மாத உணவு விநியோகத்தின் முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பித்து வழங்கற்கட்டளைகளை பெற்றுக் கொள்ளுமாறும் உடனடியாக விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்து 31.03.2010 உடன் விநியோக நடவடிக்கைகளை முடிபுறுத்துமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் இவ் விநியோகத்திற்கான உணவுப் பொருட்களை களஞ்சியங்களில் இருந்து இன்று முதல் 15.03.2010 வரை பெற்றுக் கொள்ள முடியும் என்றும், பயனாளிகள் தமக்குரிய உணவுப் பொருட்களை தாமதமின்றி தமக்குரிய ப.நோ.கூ.சங்கக்கிளைகளில் இருந்து பெற்றுக் கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்துள்ளார். (சு)

## காரியாலயம் திறப்பு

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் சுயேட்சைக்குழு 5 றேடியோ சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சைக்குழு இன்று தனது தலைமைக்காரியாலயத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு இல.32, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தியில் தனது காரியாலத்தை திறந்து வைக்கவுள்ளது.

சுயேட்சைக்குழுவின் முதன்மை வேட்பாளர் துஷாரவினால் இக் காரியாலயம் திறந்து வைக்கப்படவுள்ளது. (சு-9)







வீதி அபிவிருத்தி சம்பந்தமாக நேற்று மாலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் க.கனேஷ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் மொரூஸ் மரிதாஸ் உட்பட அதிகாரிகளைப் படங்களில் காணலாம்.

# வீதிகளை அகலமாக்குவது குறித்து நேற்று விசேட ஆராய்வுக்கூட்டம்

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள 12 வீதிகள் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பலாலி-யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி, புத்தூர் மீசாலை வீதி, யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதி ஆகியன வீதியின் மையப்பகுதியில் இருந்து இருபகுதியையும் 50 அடி அகலமாக்குவதில் பல்வேறுமட்ட தரப்புக்களால் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இதற்கமைய யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியில் வீதி அபிவிருத்தியை மிக விரைவில் முன்னெடுக்க வேண்டும் என்பதற்கமைய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நேற்று மாலை யாழ். மாவட்டச் செயலகத் தில் கலந்தாய்வுக் கூட்டம் இடம்பெற்றது.

இவ் கலந்தாய்வுக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண பணிப்பாளர் மோரூஸ் மரியதாஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் வி.சுதாகர், நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ். சிவனேசராசா, எஸ். ராதாகிருஷ்ணன், பொறியியலாளர் திருமதி கூல், பேராசிரியர் பொன். ப்ாலசுந்தரம்பிள்ளை, வர்த்தகசங்க பிரதிநிதிகள், பிரதேச செயலக செயலாளர்கள், பிரதேசசபைச் செயலாளர்கள், இந்துமாமன்ற பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

காங்கேசன்துறை வீதி, பலாலி வீதிகளில் காணப்படுகின்ற அடையாளச் சின்னங்கள் அழிக்கப்படாமல் வீதி அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டும் என சில தரப்பினரால் தெரிவிக்கப்பட்ட போதும் இதற்காக மாற்று செயற்திட்டங்களை முன்வைத்து வீதி அகலமாக்கப்பட்டு அபிவிருத்தியை முன்னெடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரு பிரதான வீதிகளில் பாதிக்கப்படுகின்ற நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து வீதி அகலமாக்கப்படுவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (சு-5)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மேலதிக வாக்களிப்பு நிலையங்கள் அமையும்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் கூடுதலான வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தேர்தல் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளன.

கிளிநொச்சியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மீள்குடியேற்றப்பட்டிருக்கும் நிலையி லேயே, கூடுதலான வாக்களிப்பு நிலையங் களை அமைக்க தேர்தல்கள் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பி.குகநாதன் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது குறைந்தளவு வாக்களிப்பு நிலையங்கள் காணப்பட்டதாக கூறியுள்ளார்.

கூடுதலான வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பில் எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி கலந்துரையாடலொன்று நடைபெறவிருப்பதாகவும் பி.குகநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் மேலதிகமாக நான்கு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (சு-5)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்
திருமதி ப.திருக்குமரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

இளையதம்பி தம்பையா

06.03.2010 அன்று காலமாகிவிட்டார். அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.
(சு-4633)

## கூடைப்பந்தாட்ட அணி தெரிவு

சிரேஷ்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்கான யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட ஆண், பெண் அணித் தெரிவு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெற உள்ளது.

இதற்கு அனைத்து கழக வீர, வீராங்கனைகளையும் கலந்து கொள்ளுமாறு கூடைப்பந்தாட்ட சங்கம் கேட்டுக் கொள்கின்றது. இப்போட்டி இம் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு)

சேவை முகவர் விற்பனைக்கு

வீடுகள், காணி கச்சேரி-நல்லூர் றோட், பருத்தித்துறை வீதி 3ஆம் கட்டை, கட்டைப்பிராய், நாவலர் வீதி, மருதடி லேன், பொற்பதி வீதி, கோண்டாவில், கந்தர்மடம் ஆகிய இடங்களில் உண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: சுந்தரம்
021 222 9177
(856)

விற்பனைக்கு

யப்பான் யுக்கி மிசின் (தையல் மிசின்) விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
நீர்வேலிவடக்கு,
நீர்வேலி.
021 4902957
072 2813353
(854)

கோகுல் ரவல்ஸ் Hokul Travels
திருமண வைபவங்களுக்கான
குளிரூட்டப்பட்ட சொகுசு கார்,
வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.
Hokul Travels
தொடர்புகளுக்கு:-
021 222 8984, 077 3747825, 077 6152992
(C-4449)

## யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தலில் திருத்தம்

09.03.2010 அன்று யாழ். மாநகரசபையினால் விளம்பரப் படுத்தப்பட்ட மூன்று சந்தை புனரமைப்புக்குமான கேள்வி விளம்பரத்தில் ஆகக்குறைந்த இக்ராட் பதிவுத்தரம் M 5 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வேலைகளுக்குரிய ஆகக் குறைந்த இக்ராட் பதிவுத் தரம் M 8 என திருத்தி வாசிக்கவும்.

09.03.2010

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
(சு-4632)

# இன்று ஒரு தகவல்

## அடுத்தவர் மேல் பழி

எதற்கெடுத்தாலும் அடுத்தவர்கள் மீது பழிபோடுகிறது இருக்கு பாருங்க... அது மனுஷனுக்குக் கை வந்தகலை.

ஒரு பேச்சாளர் இதற்குச் சில வேடிக்கையான உதாரணாங் களைச் சுட்டிக் காட்டுகிறார்.

அதாவது மனுஷன் டிக்கெற் வாங்காமல் ரயிலில் பிரயாணம் செய்கிறான். எப்படி வந்தாய்? என்று கேட்டால்"திருட்டு ரயிலில்" வந்தேன் என்கிறான்.

திருட்டுத்தனம்பண்ணுறது இவன். ஆனால்ரயிலுக்குக்கெட்டபெயர்.

அதேமாதிரித்தான் இவன் நோட்டு அடிக்கிறான். ஆனால் நோட்டுக்குப் பெயர் கள்ளநோட்டு.

சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் இவன். ஆனால் அதற்குப் பெயர் கள்ளச்சாராயம்.

இதுதான் இன்றைய உலகம். இந்தத் தவறுக்கு யார் காரணம் என்று விசாரியுங்க.

"ஐயையோ, அது நானில்லை. அவன் தான் என்று காட்டிக் கொடுப்பவர்கள் தான் அதிகம்.

அலுவலகங்களிலும் அப்படித்தான்... பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் மனிதர்கள் அதிகமாகிவிட்டார்கள். ஒரு கதை உண்டு. ஒரு சுவர் இருந்ததாம். அதில் ஒருத்தன் கையை ஊன்றியிருக்கிறான். அது பொத்தென்று கீழே விழுந்து விட்டது. ஏன்டா இந்த சுவரை சாய்த்து விட்டாய்? என்று கேட்டிருக்கிறார்கள்.

"ஐயையோ... என்மீது தப்பில்லை. சுவர் உறுதியாக இல்லை. அதைக் கட்டிய கொத்தனார் தான். இதற்குக் காரணம்" என்றான் அவன்.

உடனே கொத்தனாரைத் தேடிப் போனார்கள். அதற்கு அவர், "என்மீது தப்பில்லை. சீமெந்தையும் மணலையும் கலந்து கலவை போட்டுக் கொடுத்தவர் தான் காரணம். அவர் தான் கவனக் குறைவாக கலவையில் அதிக தண்ணீரை ஊற்றி விட்டார்." என்றார்.

உடனே கலவை போட்டவரைத் தேடிப் போனார்கள். அவர் சொன்னார்.

"அந்த மண்பானையின் வாய் அகலமாக இருந்து விட்டது. இலேசாக சரிந்ததும் தண்ணீர் அதிகமாக ஊற்றிவிட்டது. அந்தப் பானையைச் செய்தவர் தான் இதற்குக் காரணம்" என்றார்.

உடனே பானை செய்தவரைத் தேடிப் போனார்கள். அவர் சொன்னார்.

என்மீது தப்பில்லை. நான் அந்தப் பானையைச் செய்து கொண்டிருக்கும் போது அந்த வழியாக ஒரு நடனமங்கை போய்க் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்துக் கொண்டே இந்தப் பானையைச் செய்ததால் அது இப்படியாகி விட்டது. அந்த நேரம் அவர் அந்த வழியால் போகாமலிருந்திருந்தால் பானையின் வாய் இப்படி அகலமாகப் போயிருக்காது" என்றார்.

உடனே அந்த நடன மாதுவிடம் போனார்கள். அந்த அம்மா சொன்னார்.

"நான் ஒரு சலவைத் தொழிலாளியிடம் உடுப்பு வெளுக்கப் போட்டிருந்தேன். சொன்ன நேரத்தில் அவர் கொண்டு வந்து தரவில்லை.

அதனால் அவரிருக்கும் இடத்திற்குப் போக வேண்டியதாயிற்று. அவர் கொண்டு வந்து கொடுத்திருந்தால் நான் இந்த வழியாக வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை" என்றார்.

உடனே சலவைத் தொழிலாளியைத் தேடிப் போனார்கள். "ஐயா... நான் வழக்கமாக உடுப்புத் தோய்க்கும் கல்லில் ஒரு சாமியார் உட்கார்ந்து தவம் செய்து கொண்டிருந்தார்.

அவருடைய தவத்தைக் கலைக்க மனம் வரவில்லை. அது தான் பேசாமல் இருந்து விட்டேன்" என்றார்.

உடனே எல்லோரும் சாமியாரிடம் போனார்கள். அவர் இன்னமும் தவத்திலிருந்தார். அன்றைக்கு அவர் மௌனவிரதம். எதுவும் பேசமாட்டார்.

அவரிடம் இவர்கள் போய் நின்று, "ஏன் சாமியாரே, அந்த சுவர் இடிந்ததற்கு நீங்கள் தான் காரணமா?" என்று கேட்டார்கள். அவர் மௌனமாக இருந்தார்.

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி. இவர் தான் குற்றவாளி" என்றான் ஒருத்தன்.

"போடுங்கடா தலையில்" என்றான் இன்னொருத்தன். உடனே அவருடைய தலையில் ஒரு போடு போட்டார்கள். அந்த சுவர் மாதிரியே பொத்தென்று கீழே விழுந்தார் அவர். சில சமயங்களில் மௌனமாக இருப்பது கூட ஆபத்தில் வந்து முடிகிறது.

சில சமயம் அது சௌகரியமாகக் கூட இருக்கும். ஒரு சங்கீத வித்துவான் இருந்தார்.

"சேர் இன்றைக்கு சபாவில் எனக்குத்தான் சனங்கள் அதிகமாக கைதட்டினார்கள்" என்றார்.

"எவ்வளவு நேரம் பாடினீர்கள்? என்று கேட்டேன். நான் மேடையில் ஏறி சனங்களைப் பார்த்து, "இன்றைக்கு நான் மேடையில் பாடப் போவதில்லை. மௌன விரதம் இருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றேன்.

அவ்வளவுதான்... சனங்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டார்கள் தெரியுமா? என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நிகோட் திட்டத்தினால் வழங்கப்படும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவுதொகை

## சண்டிலிப்பாய், கோப்பாய் பி.செ.பிரிவுகளுக்கானது

(யாழ்ப்பாணம்)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு, கிழக்கு சமுதாய மீள மைப்பு திட்டத்தின் (NECORD) ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா படி வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவுதொகை ஐந்தா வது நாளாக பின்வரும் பிரதேச செய லக பிரிவுகளுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இன்று புதன் கிழமை கீழ்க்குறிப்பிடப்படும் நேர அட்டவணையின் அடிப்படையில் அதற்கான அனுமதிக் கடிதங்கள் கையளிக்கப் படவுள்ளன. எனவே சகல பயனாளிகளும் உரிய நேரத்திற்கு தேசிய அடையாள அட்டை / பிறப்பு அத்தாட்சி சான்றிதழ் பத்திரத் துடன் குடும்ப பதிவு அட்டை மற்றும் வங்கி வைப்புப் புத்தகம் என் பவற்றோடு குறிப்பிட்ட இடங்களுக் குச் சென்று தங்களது கையெப் பத்தினை இட்டு அனுமதிக் கடிதங் களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதில் கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்டவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படும் இடங் கள் குறித்த விபரங் கள் வருமாறு,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/129, ஜே/130, ஜே/ 131, ஜே/132, ஜே/133 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக் கும் 119 குடும்பங்களுக்கு காலை 9 மணிக்கு ஜே/132 உயரப்புலம் கிராம அலுவலர் அலுவலகத்திலும்,

ஜே/134, ஜே/135, ஜே/136, ஜே/ 137, ஜே/ 138, ஜே/ 139, ஜே/ 140, ஜே/141, ஜே/142, ஜே/143, ஜே/ 144 இல் வசிக்கும் 206 குடும்பங்களுக்கு காலை 10மணிக்கு ஜே/ 140 மானிப்பாய் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும்,

ஜே/ 145, ஜே/ 146, ஜே/ 147, ஜே/ 148, ஜே/149, ஜே/ 150, ஜே/ 151, ஜே/ 152, ஜே/ 153, ஜே/154, ஜே/ 155 , ஜே/ 156 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 310 குடும்பங்களுக்கு மதியம் ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலும் அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொள்ள முடியும்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/257, ஜே/258, ஜே/ 259, ஜே/260, ஜே/261, ஜே/ 262, கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 501 குடும்பங்களுக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் காலை 9 மணிக்கும், ஜே/265, ஜே/266, ஜே/267 இல் வசிக்கும் 308 குடும்பங்கள் ஜே/263 கிராமசேவையாளர் அலுவலகத்தில் காலை 9 மணிக்கும், ஜே/268, ஜே/269, ஜே/ 270, ஜே/271, ஜே/272, ஜே/ 279, கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் 325 குடும்பங்களுக்கு நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் காலை 9 மணிக்கும், ஜே/273, ஜே/274, ஜே/275, ஜே/276, ஜே/277 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 212 குடும்பங்களுக்கு புத்தூர் மேற்கு பொது மண்டபத்தில் மதியம் ஒரு மணிக்கும், ஜே/278, ஜே/280 பிரிவுகளில் வசிக்கும் 228 குடும்பங்களுக்கு புத்தூர் கிழக்கு யு.என். எச். சி.ஆர். கட்டிடத் தில் மதியம் ஒரு மணிக்கும்,

ஜே/281, ஜே/282, ஜே/285, ஜே/287 பிரிவுகளில் வசிக்கும் 360 குடும்பங்களுக்கு அச்சுவேலி லாலா சோப் கட்டிடத்தில் காலை 9 மணிக்கும் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (ஓ–14)

# சைக்கிள் ஓட்டப்போட்டி -2010 தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கௌரவ வடமாகாண ஆளுநரின் ஆலோசணைக்கமைய யாழ் மாவட்டத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமான திறந்த (Open) ,பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியினை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு யாழ்மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி , தீவகம் ஆகிய ஐந்து வலயங்களைச் சேர்ந்த உடற்கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி சேவைக்கால போதனாசிரியர்கள் , பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (4)

# இராசி பலன்

*10.03.2010*
*(மாசி 26, புதன்கிழமை)*
*தசமி பிற்பகல் 5.19 மணிவரை*
*பூராடம் மாலை 6.58 மணிவரை*
*இராகுகால்ம் 12.23-1.53 மணிவரை*
*சுபநேரம் 4.53-6.23 மணிவரை*
*கரவெட்டி கல்லோடை ஞானவைரவர் கொடியேற்றம்.*

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் உதவி, திடீர் பயணம், அதிகபிரயாசை, பயந்த சுபாவம். |
| இடபம் | போசன சுகம், ஆரோக்கியக் குறைவு, வீண்பகை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | அபூர்வ சந்திப்பு, பணவருவாய், நல்ல வரவேற்பு, காரிய சித்தி. |
| கடகம் | தொழில் முன்னேற்றம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், நல்ல செய்தி. |
| சிங்கம் | வியாபார விருத்தி, காரிய இடையூறு, பணக்குறைவு, மனச்சஞ்சலம். |
| கன்னி | கல்வியில் ஆர்வம், உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், தொழில் விருத்தி. |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், இனியசம்பவம், வாக்குமேன்மை. |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, அதிக செலவு, எடுத்த காரியம் தாமதமாகும், மாதர் நட்பு. |
| தனுசு | புதிய பொருள் சேர்க்கை, செய்தொழில் விருத்தி, ஜனவசியம், சயனசுகம். |
| மகரம் | பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படல், சுபசெலவு, கௌரவக் குறைவு. |
| கும்பம் | நற்பெயர், பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | சுப நிகழ்வு, கடின உழைப்பு, பிறர் உதவி, முயற்சி கைகூடும். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 110 |
| தக்காளி | 40 | 50 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 110 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | -- |
| பயிற்றங்காய் | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 90 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 |
| போஞ்சி | 80 | 90 | 70 |
| கத்தரி தம்புள்ள | 60 | 70 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 15 |
| தேசிக்காய் | 80 | 90 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலாநிதி அபிராமி சிவரூபன மங்கல விளக்கேற்றுவதையும் கல்லூரி அதிபர் வ.சிறிகாந்தன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினர் வெற்றி பெற்ற இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை இல்லத் தலைவர்களுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினால் நடத்தப்படும் அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி எழுதிய *சுகமான வலிகள்* என்னும் நூல் அறிமுகவிழா நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு மறைக்கல்வி நிலையத்தில் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டசெயலாளர் எஸ். யோசப்பா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்பணி மைக்கல் சௌந்தரநாயகம் வழங்கவுள்ளதுடன் அறிமுகவுரையை அருட்பணி ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி மற்றும் நயப்புரையை கவிஞர் யாழூர் அழகன் எஸ்.ஏ.அழகராஜா, திருமதி மேரி நாயகி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஓ-4)

# வீதி ஓட்டப் போட்டி

நல்லூர் மங்கையக்கரசி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இல்லமெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு வித்தியாலய மாணவர்களுக்கான 6 கிலோ மீற்றர் வீதியோட்டப் போட்டி இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளதாகவும் இதுவே வித்தியாலயத்தின் முதலாவது வீதியோட்டப் போட்டி எனவும் அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# மாகாண மட்ட கணித, விஞ்ஞான பாட ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சை-2010

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமாகாணத்தில் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்வதற்கு வடக்கு மாகாண மட்டத்தில் தெரிவு செய்து பயிற்சியளிப்பதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியா லயத்திலும் நடைபெறவுள்ளது.

பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுக்கும் மாணவர்கள் தோற்ற வேண்டும். அத்துடன் இம்முறை இத் தெரிவுப் பரீட்சை தமிழ்மொழி மூலத்திலேயே நடைபெறவுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்டோருக்கான பயிற்சிகள் பின்னர் ஆங்கில மொழி மூலத்திலேயே இடம்பெறும்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மத்திய கல்வி அமைச்சினால் உரிய மாணவர்களுக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 167 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமுமின்றி இப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

ஆயினும் இம்முறை மாணவர்களுக்கான வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில் கல்வி அமைச்சானது வடமாகாணத்தில் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அனுப்பியுள்ளதுடன் பரீட்சைக் கட்டணமாக இவர்கள் ரூபா 250இனைச் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாணவர்கள் தம் பரீட்சைக் கட்டணத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் செலுத்தி அதற்குரிய C100 படிவத்தினைப் பூர்த்தி செய்து பரீட்சைத் தினத்தன்று பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது இந் நிதியினை வட மாகாண கல்வித் திணைக்களத்தின் பொது நிதியில் வைப்பில் இட வேண்டும் எனவும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (2-4)

# அரச சிறுவர் நாடக விழா

(யாழ்ப்பாணம்)

கலாச்சார அலுவல்கள் திணைக்களமும் இலங்கை கலைக் கழகத்தின் உபசபையும் இணைந்து 2010 ஆம் ஆண்டில் அரச சிறுவர் நாடக விழாவை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் அரச சார்பற்ற மற்றும் தனிப்பட்டவர்களும் பங்கபற்ற முடியும்.

சிறுவர் மற்றும் இளம்வயதினர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்குமுகமாக திறந்த ,மட்டுப்படுத்தப்பட்ட ஆகிய இரு பிரிவிலும் நடைபெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட நாடகங்களில் அரச அல்லது தனியார் பாடசாலைகளும் திறந்த நாடகத்தில் கலைக்கழகம், நிறுவனங்கள், சிறுவர் நாடக குழுக்கள், தனிப்பட்டவர்கள் பிரவேசிக்க முடியும்.

பங்கு பற்றுபவர்களுக்கு சன்மானங்கள், பணப்பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டியில் கலந்து கொள்வோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் நல்லூர் பிரதேச செயலக கலாச்சார பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (ஓ-30)



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆறுதல் உள சமூக இதழ் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாவா நூலின் முதல் பிரதியை கல்லூரியின் பதிவாளர் எஸ். சிவராஜனிடம் வழங்குவதையும் அருகில் இணைப்பாளர் ப. தனபாலன் மற்றும் இதழ் ஆசிரியர் தெ.மதுசூதனன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# முத்தமிழ் விழாவும் 'மந்தமாருதம்' மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு முத்தமிழ் விழாவும் *மந்த மாருதம்* மலர் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா ஸ்கந் தவரோயாக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கல்லூரி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றத்தினரால் கல்லூரி யின் 160 அகவை நிறைவில் வெளியிடப்படும் *மந்த மாருதம்* மலரின் ஆய்வுரையை ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை. எம். பி அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ)

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாடசாலைகளில் தரம் 9 இற்கு விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 13, 14 ஆம் (சனி, ஞாயிறு) ஆகிய திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை வரணி மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் குறித்த ஆசிரியர் களை தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

☼ ☼ ☼

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6 ,7 ,8 இற்கு சைவ சமய (பண்ணிசை) பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 4 மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (2-4-19)

# ஓய்வூதிய வவுச்சர்கள் இதுவரை கிடைக்காதவர்களுக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் கிராமிய வங்கி ஓய்வூதியர் தவிர்ந்த ஏனைய ஓய்வூதியர்களுக்கான மார்ச் மாத ஓய்வூதிய வவுச்சர் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை வவுச்சர் கிடைக்காதவர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறும் இதுவரை உயிர் வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்கள் உடனடியாக ஓய்வூதியக் கிளையில் சமர்ப்பிக்கும்படியும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இருபாலை சீ.சீ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திர வடிவேல் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஜே/260 கோப்பாய் தெற்கு கிராம சேவகர் சி.உதயகுமார், பொதுச் சுகாதார உத்தியோகத்தர் கா. சிவநேசகுமார், இருபாலை ஏ.எம்.ரி நிறுவன முகாமையாளர் சு.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-4)

## யாழ்.செய்திகள்

# பயிற்சி வகுப்பு

(அல்வாய்)

எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான சிரேஸ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெற வுள்ளதாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார். (ஓ-4-9)

# ஆடை உற்பத்தி கண்காட்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச மகளிர் அபி விருத்தி குழுவினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆடை மற்றும் உற்பத்தி கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி வர்த்தக வங்கிக்கு அருகாமையிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஓ-4-29)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 31

மகாவம்சம் குறிப்பிடும் காலிங்க மாகனையே மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் மாகோன் என்று சொல்லுகின்றது. அந் நூலிற் காலிங்க மாகோன் என்ற சொற் றொடர் காணப் படுகின்றமையினால் இக்



கருத்து மேலும் அழுத்தம் பெறு கின்றது. மாகோ னைப் பற்றி அந் நூலிலே சொல்லப் படும் விவரங்கள் காலிங்கமாக னைப் பற்றி மகா வம்சமும் பூஜா வலியும் கூறு கின்ற வற் றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. சில இடங்களிலே முரண்பாடுகளும் உள் ளன. பாளி சிங்கள நூல்களிற் காணப் படாத பல விட யங்கள் மட்டக்களப்பு பூர்வ சரித் திரத்தில் உள்ளன. அவனைப் பற் றிய விவரங்கள் பெரும்பாலும் மட்டக் களப்பு தேசம் பற்றியவை என்பது குறிப் பிடத்தக்கது. இந்நூலிலே மாகனைப் பற்றிவரும் குறிப்புக்களின் சாராம்சங்களை கீழ்வரு மாறு வகுத்துக் கொள்ளலாம்.



1. மாகன் கலிங்க தேசத்திலிருந்து படையோடு இலங்கைக்கு வந்தவன். அவன் மனுவரதன் என்னும் மன்னனின் மூன்றாவது புதல்வன். அவனுடைய வரவிற்கு இலங்கையிலுள்ள சமயத் தக ராறுகள் பின்னணியாக அமைந்திருந் தன.

2. பகையினை வென்று சைவசமயத் தை மேலோங்கச் செய்வதற்கு நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு கலிங்க தேசத்து மன்னன் மாகோனை அனுப்பி வைத்தான்.

3. மணற்றிடலில்வந்திறங்கியமாகோன் அங்கிருந்து மட்டக்களப்புக்குச் சென்று அங்கிருந்த அரசனாகிய தினசிங்கனை யும் அவனுடைய சுற்றத்தவர், பரிவாரத் தார் என்போரையும் அழித்துவிட்டுச் சுக திரன் என்பவனுக்கு அரச பதவியை வழங்கினான். சுகதிரன் காலிங்கா குலத் தவன். மண் முனையிலே கோட்டை அமைத்து அதனை இராசதானியாகக் கொண்டு அதிகாரம் செலுத்தினான்.

4. மாகோன் பொலநறுவையாகிய தோப் பாவையை முற்றுகையிட்டு அணி கங் கனை வென்று படையாட்சி வன்னியரின் உதவியோடு இராச்சியத்தைக்கைப் பற்றி னான். அதன் பகுதிகளைப் படையாட்சி வன்னியருக்குப் பகிர்ந்து கொடுத்தான். அத்துடன் மாகோன் தோப்பாவையினை இராசதானியாகக் கொண்டு ஆட்சிபுரிந் தான். மாகோனின் ஆட்சிக் காலத்திற் புத்த கோயில்களையும் விகாரங்களையும் இடித்துப் புத்தகுருமாரைத் துன்புறுத்தி னார்கள்.

## மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

5. மட்டக்களப்புச் சமுதாய அமைப்பின் பிரதான அம்சமாகிய குடிமுறை மாகோ னால் வகுக்கப்பட்டது.

6. மட்டக்களப்பு முக்குவர் வன்னிமை கள் அவனால் உருவாக்கப்பட்டவை

7. மட்டக்களப்பு தேசத்து ஆலயத் தொழும்புகள் மாகோனால் வகுக்கப்பட் டவை.

மட்டக்களப்பு தேசம் பற்றிய வரலாற் றைக் கூறுவதால் மாகோனின் காலத்தில் மட்டக்களப்பிலே ஏற்பட்ட மாற்றங்களை விவரமாக நூல் கூறுகின்றது. இந்த விவ ரங்கள் வேறெந்த நூலிலும் காணப்பட வில்லை அதுமட்டுமன்றி அவை கணிச மான அளவிற்கு ஆதாரபூர்வ மானவை யாகக் காணப்படுகின்றன. பிரதானமான விடயங்கள் சிலவற்றைப் பொறுத்தவரை யில் அதிலே கூறப்படுவன மகாவம்சம் முதலியன சொல்வனவற்றோடு பொருத் துனவாயுள்ளன. மேலும் அதிலே காணப் படுகின்ற விவரங்கள் மாகனுடைய செயல்கள் சிலவற்றுக்குப் பொல நறுவை யிற் காணப்பட்ட சூழ்நிலை ஏதுவாய் இருந்த தென்றும் சிந்திக்கலாம். மாகோன் அங்கிருந்த காலிங் வம்சத்தோடு தொடர் புடையவன் என்பதில் எதுவித சந்தேகமு மில்லை. மட்டக்களப்பு பூர்வசரித்திரில் மாகோன் பிரதானமானதொரு மன்ன னாக வர்ணிக்கப்படுகிறான். பொலநறுவை காலத்தின் இறுதிக்கட்டமாக அவனது ஆட்சி அமைந்தது. சமயப் பூசலும் பகை மையும் மேலோங்கிய ஒரு காலத்தில் அவ னுடைய படையெடுப்பு நிகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. மாகனும் அவனுடைய ஆத ரவாளரிற் சிலரும் தக்கிணத்திலே 12 ஆம் நுற்றாண்டில் உதயமாகிப் பரவிய வீர சைவக் கோட்பாடுகளினாற் கவரப்பட்டி ருந்தனர் போலத் தெரிகின்றது. தக்கி ணத்தில் வீரசைவர் சமணருக்கு விரோ தமாகச் செயற் பட்டனர். இலங்கை யில் மாகனும் அவ னது ஆதரவாளர் சிலரும் பௌத்த சம



யத்துக்கு விரோத மான செயல் களில் ஈடுபட்டனர். இலங் கையிலே மாக னது நெடுங்கால ஆட்சி யின் விளைவாகப் பௌத்த சமயம் தமிழரிடையே முற்றாக வழக்கொழிந்து விட்டது எனக் கருத லாம். மாகனுடைய ஆட் சிக்காலத்தில் மட்டக்களப் பிலே சமு தாய, பண்பாட்டு நிலைகளிலே குறிப் பிடத் தக்க மாற்றங்கள் ஏற்பட லாயின. மலையாள தேசத்துமுக்குவர் உயர்பதவி களையும், நில மானிக் களையும் பெற்றனர். சமுதாயக் கட்டமைப்பு, தேச, சமூக வழமைகள் என் பவற்றில் அவர்களின் செல் வாக்கு மேமேலாங்கியது. அதன் கரணமாக மருக்க மக்கள் தாயமுறையினை அடிப் படையாகக் கொண்ட முக்குவர் வழமை தேசத்து வழமையாக அழுத்தம் பெற்றது.



மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் இரண்டாம் பகுதி கல்வெட்டுப்பாடல்கள் பல அடங்கிய தொகுதியாகும். அப்பாடல்கள் வெவ்வேறு காலங்களில் எழுந்தவை. பிராந்தியத்தில் நெடுங்கால மாக வளர்ச்சி பெற்று வந்த ஒரு இலக்கிய மரபினைப் பிரதிபலிக்கின்ற பாடல்களாக அவை அமைகின்றன. அந்த மரபு மக்கள் வாழ்க் கையோடு தொடர்புடையது. அப் பாடல்கள் தேச–சமூக வழமை களையும், ஆலய வழமைகளையும் பற்றியவை. அவை பெரும்பாலும் ஆதாரபூர்வமான வை. வேறு ஆவணங்களிலோ, நூல்களி லோ சொல்லப்படாத விடயம் அவற்றிலே பதிவு செய் யப்பட்டுள்ளன. அவற்றை விரிவா கவும், ஆழமாகவும் விமர்சன நோக்கில் ஆராய வேண்டும். பிரதேச வரலாறு பற்றிய ஆய்வுகளுக்கெல்லாம் அத்தகைய முயற்சி அடித்தளமாக அமை யும். அத்து டன் பிராந்தியத்திலே தொல் பொருள் அகழ்வுகளும், ஆய்வுகளும் செம்மை மாக நடைபெறவேண்டும். தொல் பொருட் சின்னங்களைப் பேணிக்கொள் ளுவதற் காக பூர்வாங்கமுயற்சிகளைத் தொடங்க வேண்டும். அத்தகைய பணிகளை முன் னெடுத்துச் செல்லும் பொறுப்பும் வாய்ப்புகளும் கிழக்குப் பல் கலைக் கழ கத்தைச் சார்ந்தனவாகும். (முற்றும்)

பேராசிரியர்
சி.பத்மநாதன்

# மதுபோதையில் தம்பியை வெட்டிக்கொன்ற அண்ணன்

## குருநாகலில் சம்பவம்

(கொழும்பு)

உறங்கிக் கொண்டிருந்த சகோதரரை மண்வெட்டியால் தாக்கி படுகொலை செய்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்ட சம்பவமொன்று குருநாகல் கட்டுபெத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. மதுபோதை யில் இருந்த நிலையிலேயே குறித்த சகோ தரர் மீது அவர் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தி யட்சருமான பிரஸாந்த ஜயக்கொடி தெரிவித் தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் எதிரிசிங்க முதியன்சேலாகே பிரேமரத்ன (வயது 48) என்பரே உயிரிழந்தவராவர். தனது இளைய சகோதரர் உறங்கிக் கொண்டி ருந்த இடத்துக்கு மதுபோதையில் வந்துள்ள சந்தேக நபர் அவரை பொல்லு ஒன்றினால் பலமாகத் தாக்கியுள்ளார்.

இந்நிலையில் மயக்கமடைந்த சகோத ரரை அருகிலிருந்த மண்வெட்டியைக் கொண்டு தலையில் பலமாகத் தாக்கியதை அடுத்தே அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக் கப் பெற்ற தகவலை அடுத்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தீவிர விசார ணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்தப் படுகொலை தொடர்பான மேலதி விசாரணைகள் கட்டுபொத்தை பொலிஸா ரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸ்பேச்சாளர் மேலும் கூறினார். (ஓ-4)

# தேர்தல் கடமைகளுக்கென அதிகாரிகளை நியமிப்பது தொடர்பான நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கென அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலை யங்களில் பணி புரிவதற்கென அதிகாரி களை நியமிப்பது தொடர்பாக தேர்தல்கள் ஆணை யாளர் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக ளுக்கு விசேட சுற்று நிருபம் ஒன்றை அனுப் பியுள்ளார்.

அதில் 800 வாக்காளர்களுக்கு குறை வாக உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு 8 அதிகாரிகளை நியமிக்கும் படி குறிப்பிடப் பட்டுள்ளது.

அதேபோல் 800 தொடக்கம் 1200 வாக் காளர்களை கொண்ட வாக்களிப்பு நிலை யங்களுக்கு 9 பேரைக் கொண்ட அதிகாரிக ளின் குழுவை பணியில் அமர்த்துவது எனத் தீர்மாணிக்கப் பட்டுள்ளது.

14 அதிகாரிகளில் 1200 தொடக்கம் 1500 வரை வாக்காளர்களைக் கொண்ட வாக்க ளிப்பு மத்திய நிலையங்களுக்கு நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1500 க்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட மத்திய நிலையங்களில் சேவை யாற்ற 15 அதிகாரிகளை கடமையில் ஈடு படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(2-6)

போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்பட்டுவருகின்றது
இந்நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை!
பொ.ஐங்கரநேசன் Msc, PGDJMC
2
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!
பழைய மாணவர்கள்-யூனிவேர்சல்

(W4559)



ஏழாலை மகாவித்தியாலயத்தின் ஆய்வுகூடத் திறப்புவிழா நிகழ்வில் விருந்தினர்களாக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரை வித்தியாலய அதிபர் பொ.கனகசபாபதி அழைத்து வருவதை முதலாவது படத்திலும் மெய் வல்லுநர் போட்டி நிகழ்வில் வலிகாம வலய உடற்கல்வி முதன்மை ஆசிரியர் மங்கல விளக்கேற்றுவதையும் மற்றும் மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வையும் மற்றைய படங்களில் காணலாம்.

# மொனராகலை ஐ.தே.மு.வேட்பு மனுவை இரத்துச் செய்யுமாறு கோரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

மொனராகலை மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பு மனுவினை இரத்து செய்யுமாறு கோரி அடிப்படை உரிமைமீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வேட்புமனுவில் காணப் படும் சேனக ரத்நாயக்க என்பவரின் பெயரை நீக்கி மீண் டும் தனது பெயரை உள்ளடக்க வேண்டு மென ஐக்கிய தேசிய முன்னணயின் ஜானக திஸ்ஸ குட்டியாராட்சி கோரிக்கை விடுத்துள் ளார்

இந்தச் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தப்படும் வரையில் மொனராகலை மாவட் டத்தில் தேர்தல்கள் நடத்தப்படக் கூடாது என அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்

ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் பட் டியலில் தனது பெயர் இடம்பெற்றிருந்த போதி லும் இறுதி நேரத்தில் தனது பெயருக்குப் பதிலாக வேறும் ஒரு நபரின்பெயர் உள்ளடக் கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

வேட்பு மனுவில் பெயர் மாற்றம் செய்யப் பட்ட சம்பவம் மொனராகலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் மொனாரகலை மாவட்ட தலைமை வேட்பாளர் ரஞ்சித் மத்தும பண்டார கட்சித் தலைமைத்து வத்துடன் முறுகலை ஏற்படுத்திக்கொண்டுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் பூரண விசா ரணை நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரி விக்கின்றன. (2-4)


தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி



தமிழர்களின் தலைவன்
காட்டிய பாதையில்...
தமிழ்த் தேசியத்தைக் காத்திட...
சுயநிர்ணயக் கொள்கையை நிலைநாட்டிட...
தாயகக் கோட்பாட்டை நிலை நிறுத்தி...
இருதேசம் ஒரு நாடு என்ற உறுதியான
கொள்கையோடு நின்றிடும்
உங்களில் ஒருவன்.

திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2

திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை
பெருவெற்றி பெறச்
செய்திடுவோம்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் X

(605) அரசறிவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.


# மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மேலும் தளர்த்தப்படுகின்றன

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியினால் அதன் 2010 இற்கும் அதற்கு அப்பாலுமான வழி காட்டல் இல் அறிவிக்கப்பட்டதற்கிணங்க வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங் கல்கள் தொடர்பாக இம் மாதம் 11ஆம் திகதியி லிருந்து பின்வரும் வழிமுறைகள் நடை முறைப் படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்படு கிறது.

1. இலங்கையில் வதியும் பின்வரும் பகுதி யினர் வெளிநாட்டுக் கணக்குகளை திறக்க வும் அதனை பேணி வரவும் அனுமதிக்கப் படுவர்.

-மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப் பட்ட வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து வெளி நாட்டு செலாவணியினை உழைக்கின்ற ஆட்கள்.

-இலங்கை அலலது வெளிநாட்டில் சர்வ தேச ரீதியாக தொழில் சார் நிபுணத்துவ பணி களை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஆட்கள்

-வெளிநாட்டில் எந்தவெரு தொழிலிலே னும் ஈடுபட்டுள்ள ஆட்கள்.

-கல்வி அத்துடன் அல்லது மருத்துவ சிகிச் சைக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள ஆட்கள் அத்துடன்

- பொருட்களை ஏற்றுமதி செய்வோர்.

2. பொருட்கள் மற்றும் பணிகளில் வர்த்த கத்துடன் தொடர்பான வெளிநாட்டுச் செலா வணி கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக் குகின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணி யிலான முக்கிய ஒப்பந்தங்கள், பணவனுப் பல்கள், ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் வழங்கல் மற்றும் கடன்பாடுகள் அனு மதிக்கப்படும்.

3.இறக்குமதி செய்யப்படுவதற்காக தெரிந் தெடுக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் பெறு மதியின் மீதான முற்பணக் கொடுப்பனவுகளுக் கெதிராக தற்போதைய 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடு அகற்றப்படும்.

4.இறக்குமதி உண்டியல்களின் முற் கொடுப்பனவு மீதான இடைநிறுத்தம் நீக்கப் படும்.

5.வதிவற்றோரினால் வர்த்தக வங்கிக ளில் பேணப்பட்டு வரும் தற்போதுள்ள பல் வேறு முதலீட்டுக் கணக்குகளான பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள், திறைசேரி முறிகள் வெளிநாட்டு ரூபாக் கணக்குகள், திறை சேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள் மற்றும் திறைசேரி உண்டி யல், முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள்- தேசாபிமானி என்பன ஒன்றாக் கப்படுவதற்கு அனுமதிக்கப்படும். ஒன்றாக்கப் பட்ட கணக்குகள், பிணையங்கள், முதலீட்டுக் கணக்குகள் என மீளப்பெயரிடப்படும்.

மேலே குறிப்பிட்ட செலாவணிக் கட்டுப்பாடு களை தளர்த்துவது முதலீட்டாளர் நம்பிக்கை மேலும் மேம்படுவதற்கும் வெளிநாட்டுச் செலா வணிச் சந்தை உறுதியடைவதற்கும் அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் உல கப் பொருளாதாரத்துடன் மேலும் ஒருங் கிணைக்கப்படுவதற்கும் வழி வகுக்குமென மத்திய வங்கி கருதுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ஓ)

# தேநீர் குடிக்கும் பெண்களுக்கு கர்ப்பப்பை புற்றுநோய் வராது

தேநீர் குடிக்கும் பெண்களுக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து வோஸிங்டன் பல் கலைக்கழகம் ஆய்வு மேற்கொண்டது. 2 ஆயிரம் பெண்களிடம் இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

அவர்களுக்கு பச்சை தேயிலையில் இருந்து தயாரிக்கப்பட்ட ஒன்றுக்கும் மேற்பட்ட கப் தேநீர் பருக தினமும் வழங்கப்பட்டது.

அவர்களில் 54 சதவீதம் பேருக்கு புற்று நோய் ஏற்படுவது குறைந்து காணப்பட்டது குறிப்பாக கர்ப்பப்பை புற்று நோய் பாதிப்பில் இருந்து அவர்கள் தப்பித்தனர்.

இதன் மூலம் தேநீர் குடிக்கும் பெண்க ளுக்கு கர்ப்பப்பை புற்று நோய் ஏற்படும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருப்பதாக விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-4)


# வலி தென்மேற்கு பிரதேச சபை வீதிக்குப் பெயர் மாற்றம்

வலி தென்மேற்கு பிரதேசசபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக நிர்வாக எல்லைக்குட்பட்டதும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மானிப்பாய் கிழக்கு கிராம சேவைப்பிரிவு ஜே/138 இன் கீழ் அமைந்துள்ளதுமான பாடசாலை வீதியினை சுவாமி விபுலானந்தர் வீதி என பெயர் மாற்றம் செய்து பதிவு செய்வதற்கு பொது அமைப்புகளிடமிருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆட்சே பனைகள் ஏதும் இருப்பின் 14 நாட்களுக்குள் அறியத்தருமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

வீதியின் அமைவிடம் : சங்கரப்பிள்ளை வீதியில் மானிப்பாய் இந்துக்கல்லூ ரிக்கு தெற்காக ஆரம்பித்து கட்டாப்பாலி வீதியில் முடிவடைகிறது.

வீதிக்கு இடப்படவுள்ள வீதியின் பெயர் : *சுவாமி விபுலானந்தர் வீதி*

செயலாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(சி/4629)





மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் கு.இராசநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட காங்கேசன்துறை இலங்கை வங்கி முகாமையாளர் தி.செந்திநாதன் மற்றும் வித்தியாலய அதிபர் திருச்சி நவரத்தினம், உபஅதிபர் திருமதி பா.ஈஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் சிறப்பு விருந்தினர் வெற்றி பெற்ற மாணவனுக்கு நினைவுக்கேடயம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# கடற்றொழிலாளர்கள் சங்க பிரதிநிதிகளின் சந்திப்பு அவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வளிக்கும்

## நிருபமாராவிடம் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

வடமராட்சி பகுதி கடற்தொழிலாளர்களும் இடம் பெயர்ந்து வந்து அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டு வரும் மயிலிட்டி பகுதி கடற்றொழிலாளர்களும் இதனால் பல கோடி ரூபா நஸ்டமடைந்துள்ளதாகவும் இந்திய கடற்தொழிலாளர்களது இழுவைப் படகுகள் வடமராட்சி கரையிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை மிக அண்மித்த நிலையில் அத்துமீறி புகுந்து தொழிலில் ஈடுபட்டு தாங்கள் வீசி வைத்திருந்த வலைகளை அறுத்துச் சென்றுள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இப்பகுதி கடற்தொழிலாளர்கள் சார்பில் வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் அ.யோகராசா அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து இழுவைப் படகுகளின் மூலம் தொழில் புரிந்து வருவதால் இவ்வாறான பிரச்சனைகளுக்கு உள்ளூர் கடற்தொழிலாளர்கள் தொடர்ந்தும் முகங்கொடுத்து வருவதை தான் உணர்ந்து வருவதாகக் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ் அவர்களுடன் தான் விரிவாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் கடற்பிராந்தியத்திற்குள் இந்தியக் கடற்தொழிலாளர்கள் ஊடுருவுவதால் இலங்கைக் கடற்தொழிலாளர்களது வாழ்வாதாரத்தை அது பெரிதும் பாதிப்பதாகவும் இது தேவையற்ற பகைமை உணர்வுக்கு வித்திடுவதாகவும் நிருபமாராவ் அவர்களிடம் தான் விளக்கிக் கூறியிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பிரச்சனையை இருதரப்பினரும் இணைந்து சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வசதியாக இந்திய மத்திய அரசுடனும் தமிழக மாநில அரசுடனும் தொடர்பு கொண்டு முரண் பாடுகளுக்குள் சிக்கியிருக்கும் கடற்தொழிலாளர்களது சங்கங்களின் பிரதிநிதிகளுக்கிடையில் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யும்படி தான் அவரிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் இந்த வேண்டுகோளுக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறானதொரு சந்திப்பின் மூலம் இப்பிரச்சனையை நாம் நிரந்தரமாகத் தீர்த்துக் கொள்ள முடியுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா நம்பிக்கைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-4)

# உணவகங்களில் திடீர் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அச்சுவேலி,நெல்லியடி ஆகிய பிரதேசங்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட உணவகங்களில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது உணவுப்பண்டங்களுக்கு நிர்ணயித்து அறிவிக்கப்பட்ட விலைகளை விலைப்பட்டியல் மூலம் வெளிப்படுத்தாமை, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கூடுதலாக விற்பனை செய்தமை அவதானிக்கப்பட்டது.

அவ்வாறு தவறிழைத்தவர்களுக்கு முதல் தடவை என்பதால் பாவனையாளர் அதிகாரச் சட்டத்தின் 26:1 இன்படி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் இவ்வாறான தவறுகளைச் செய்யும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார் .

(ஓ-2)

# இன்று நாட்டு மக்கள் பசியிலும் பட்டினியிலும் பரிதவிக்கின்றார்கள்

## முன்னாள் எம்.பி.லக்ஸ்மன்கிரியெல்ல

(கொழும்பு)

இன்றைய அரசாங்கத்தினால் சீரழிந்து போயுள்ள நம் நாட்டின் நிர்வாகத் துறைகளையும் பொருளாதாரத்தையும் எவ்விதத்திலும் சீர் செய்ய முடியாது. நிர்வாக மேன்மைக்கும் பொருளாதார செழிப்பிற்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் மட்டுமே பரிகாரம் காணலாம் என்று கண்டி மாவட்ட முன்னாள் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும் செங்கடகல ஐ.தே.க. அமைப்பாளரும் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் ஐ.தே.க. முன்னணியின் முதன்மை வேட்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டி புஸ்பதான மண்டபத்தில் நடைபெற்ற கண்டி செங்கடகல பிரதேச ஐ.தே.க. முன்னோடிகள் அடங்கிய பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல இன்று நாட்டு மக்கள் பசியிலும் பட்டினியிலும் பரிதவிக்கின்றனர்.

இந்த அரசாங்கம் ஜனநாயக உரிமைகளைக் குழி தோண்டி புதைத்து மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துள்ளது. மேலும் மக்களை அடக்குமுறைக்குள் அடிமைப்படுத்துவதற்கு எதிர்வரும் பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை உதாசீனம் செய்துவரும் இன்றைய அதிகார வர்க்கத்தினர்கள் மக்களை சதாகாலமும் ஏமாற்றுவது எளிதென தப்புக் கணக்குப்போடுகின்றனர்.

ஆனால் இம்முறை ஏமாறப்போவது அரசாங்கமே என்பதை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி உணரலாம். தேர்தல் சட்டங்களை மீறி அனைத்தையும் பக்கச்சார்பாகச் செயற்படுத்தும் அரசின் போக்கை மக்கள் இனிமேலும் அனுமதிக்க மாட்டார்கள்.

நாட்டில் நல்லாட்சி மலரவும் அனைத்து மக்களும் சமாதானமாகவும் சம உரிமைகளோடும் வாழவும் வழி வகுப்பதே எமது முதல் பணியாகும் என்றார்.

(ஓ-2-4)

# சைக்கிள் ஓட்டப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பு ஏற்பாட்டில் குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கான சைக்கிள் ஓட்டப்பயிற்சிகள் தினமும் காலை , மாலை வேளைகளில் துரையப்பா விளையாட்டு மைதானப் பிரதேசத்தில் நடைபெற்று வருகிறது.

ஜேர்மனில் பயிற்சி பெற்ற ஓட்டப்பயிற்றுவிப்பாளர் ஆர்.ஆர்.குணசேகர என்பவரே தினமும் காலையில் 6 மணி முதல் 8 மணி வரையும் மாலையில் 4 முதல் 6 மணி வரையும் பயிற்சி அளித்து வருவதாகவும், இப்பயிற்சியின் போது பொலிஸ் மற்றும் அம்புலன் சேவைப்பிரிவினர் இணைந்து சேவை வழங்கி வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-14)


பாராளுமன்றத் தேர்தல் - 2010



தேர்தல் மாவட்டம் இல. 10
யாழ்ப்பாண மாவட்டம்.

சுயேட்சைக் குழு இல. 11

X



தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக
அதனை நன்கு புரிந்து கொண்ட
அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
தலைமையைப் பலப்படுத்த
இலங்கை மக்கள் கட்சியில் இணைந்துள்ளேன்.
உங்கள் வாக்கை மங்கனி சின்னத்திற்கு இடுவதுடன்
விருப்பு வாக்கு 1 ஐ எனக்கு அளிக்குமாறு
வேண்டுகின்றேன்.

X கலாநிதி கந்தையா குணராசா
செங்கை ஆழியான்

புத்திலங்கை

# துருக்கியில் பயங்கர நிலநடுக்கம்
## பலியானோர் தொகை அதிகரிப்பு

(அங்காரா)

துருக்கியில் திங்கட்கிழமை ஏற்பட்ட கடுமையான நில நடுக்கத்தில் 57 பேர் பலியாகினர்.

துருக்கியின் கிழக்குப் பகுதியிலுள்ள இலாசிக் என்ற இடத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கம் காரணமாக ஏற்பட்ட அதிர்வுகள் ரிக்டர் அளவுகோலில் 6 ஆக பதிவானது. இதில் அங்குள்ள 6 கிராமங்கள் மிகவும் மோசமாக பாதிப்படைந்தன. வீடுகள், மசூதிகள், இடிந்து தரை மட்டமானது. இடிபாடுகளில் சிக்கி 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அரசின் பேரிடர் உதவி மையம் தெரிவித்துள்ளது.



நில நடுக்கம் அதிகாலை 4.32 மணி அளவில் ஏற்பட்டதால் பெரும்பாலானோர் தூக்கத்திலேயே உயிரிழக்க நேரிட்டுள்ளது. அடுத்தடுத்து 30 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டன என இஸ்தான் புல்லிலுள்ள நில நடுக்க ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. இதனால் கிராமங்களிலுள்ள வீடுகள் அனைத்தும் சேதமடைந்தன.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட கிராமத்தின் நிர்வாக அதிகாரி கூறுகையில்,

இங்கு ஒரு வீடு மீதியில்லாமல் அனைத்தும் இடிந்து தரை மட்டமாகியுள்ளன. இதனால் மக்கள் தங்குவதற்கு இடமின்றி தவித்து வருகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

இந்த கிராமங்களில் உள்ள சாலைகள் குறுகலாக இருப்பதால் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அம்புலன்ஸ் போன்ற வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கியுள்ளோரை மீட்கும் பணிகளில் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என இலாசிக் மாகாண ஆளுநர் தெரிவித்தார். (ஓ-4)

# அமெரிக்காவின் குடியேற்ற நாடாக மாறும் பாகிஸ்தான்
## இம்ரான்கான் தெரிவிப்பு

அமெரிக்கவின் குடியேற்ற நாடாக பாகிஸ்தான் மாறி வருகிறது என முன்னாள் கிரிகெட் வீரர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும் பாகிஸ்தான் தெரி-இ-இன்சாப் கட்சியின் தலைவருமான அவர் மேலும் கூறியதாவது,

அதிபர் ஆசிப்அலி சர்தாரி நாட்டில் அமெரிக்க கொள்கைகளை செயல்படுத்தி வருகிறார். முன்னாள் பிரதமர் நாவாஸ் ஷெரீப் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பஞ்சாப் மாகாணத்திலும் இதே நடைமுறை தொடர்கிறது.

இதன்மூலம் பாகிஸ்தான் அமெரிக்காவின் குடியேற்ற நாடாக மாறி வருகிறது. எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் பாகிஸ்தானை இஸ்லாம் நலம் பேணும் நாடாக மாற்றுவோம் என்றார்.

இதற்கிடையே பாகிஸ்தான் முன்னாள் அதிபரும் தற்போது வெளிநாட்டில் வசிப்பவருமான முஷாரப் மீணடும் நாடு திரும்ப போவதாக வெளியான தகவலை அவரது ஆதரவாளர் மறுத்துள்ளார்.



பாகிஸ்தான் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் முஷாரப்புக்கு நெருக்கமானவருமான தாரிக் அஜிஸ் கூறுகையில், தற்போதுள்ள சூழ்நிலையில் முஷாரப் கண்டிப்பாக நாடு திரும்ப மாட்டார். அவர் அரசியல் கட்சியை தொடக்கப்போவதாக வெளியான தகவலும் உண்மை அல்ல என்றார். (ஓ-4)

# ஆப்கானிஸ்தானில் தொடரும் தலிபான்களின் ஆதிக்கம்

(காபூல்)

தலிபன் தீவிரவாதிகள் பிடியிலிருந்த ஆப்கானிஸ்தானை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை கள் மீட்டன. அங்கு தேர்தல் நடந்து அதிபராக ஹமீத் கர்சாய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இருந்தும் அங்கு தலிபான்களின் ஆதிக்கம் தொடர்ந்து நீடித்து வருகின்றது. ஆப்கானிஸ்தான் வட மேற்கு பகுதியல் பல கிராமங்கள் போட்டி தலிபான்கள் வசம் இருந்தது.

அவற்றை மீட்க அவர்களுடன் தலிபான் தீவிரவாதிகள் கடந்த 2 நாட்களாக துப்பாக்கிச் சண்டை நடத்தினார்கள். இதில் 70 தீவிரவாதிகள் பலியானார்கள். முடிவில் போட்டி தலிபான்களிடமிருந்த பல கிராமங்களை தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றினர். (ஓ-4)

# அமெரிக்காவில் இவ்வாண்டில் 26 வங்கிகள் செயலிழப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் பொருளாதாரம் மீட்சி பெற ஆரம்பித்திருந்தாலும் வங்கிகள் செயலிழப்பு தொடர்கிறது. இந்த ஆண்டு இது வரையில் 26 வங்கிகள் செயலிழந்து விட்டன.

ஜனவரி மாதம் 15 வங்கிகளும் பெப்ரவரி மாதம் 7 வங்கிகளும் இந்த மாதம் 5 ஆம் திகதி ஒரே நாளில் 4 வங்கிகளும் செயலிழந்து விட்டதாக அறிவித்துவிட்டன.

2008 செப்டம்பர் மாதம் லெமான் பிரதர்ஸ் என்ற நிறுவனம் செயலிழந்ததாக அறிவித்த போது உலகமே அதிர்ந்தது. அமெரிக்காவின் பங்குச் சந்தை வர்த்தகம் நடைபெறும் வால்ஸ்ட்ரீட்டிலேயே தலைமையகத்தைக் கொண்டிருந்த லெமான் பிரதர்ஸ் நிறுவனம் மிகப் பெரிய வங்கியாக உலகின் நிதி வட்டாரங்களில் கருதப்படும் அந்த நிறுவனமே செயலிழப்பு என்று அறிவித்த பிறகு ஏராளமான நிதி நிறுவனங்கள் செயலிழப்பு அறிவித்தலை கொடுத்து வருகின்றன.

வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் இதில் அடக்கம். சென்டினியல் வங்கி, வாட்டர் பீல்ட் வங்கி, பேங்க் ஆஃப் இல்லினாய்ஸ், சன் அமெரிக்கன் வங்கி ஆகியவை இம்மாதம் 5 ஆம் திகதி செயலிழப்பு அறிவித்தலை கொடுத்தன.

இந்த நான்கு வங்கிகள் செயலிழந்ததால் ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு 30.48 கோடி டொலர்கள். கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்காவில் வேலையற்றோர் எண்ணிக்கை 9.75% என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்திலும் இதே எண்ணிக்கையில் தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)




# வனப்பாதுகாப்பு முயற்சிகளில் உலக நாடுகள் கூட்டு நடவடிக்கை

(சென்னை)

வனக் குற்றங்களில் ஈடுபடுபவர்களை ஒடுக்கும் பொருட்டு உலகம் முழுவதும் உள் ஐந்து கண்டங்களைச் சேர்ந்த 18 நாடுகளில் வனச் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்களை கண்காணிக்க டிராம் எனப்படும் கூட்டு நடவடிக்கை கடந்த மாதம் முதலாம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை மேற்கொள்ளப் பட்டது. இது குறித்து வனக் குற்றங்கள் கட்டுப் பாட்டுத்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு.

டிராம் கூட்டு நடவடிக்கையில் இன்டர் போல் உதவியுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் வனத்துறை, சுங்க இலாகா, போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு மற்றும் வனத்துறை சார்ந்த துறைகள் கடந்த மாதம் டிராம் எனப் பெயரிடப்பட்ட கடத்தல் தடுப்பு கண்காணிப்பில் ஈடுபட்டன. இதில் இன்டர் போலின் அங்கத்தினரான இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட18 நாடுகள் கூட்டு நடவடிக்கையில் பங்கேற்றன.

இந்த நடவடிக்கையின் போது வனச் சட்டத்திற்கு புறம்பான வகையில் நடந்த 23 சம்பவங்களில் வன உயிரினங்கள் அவற்றின் தோல் ஏற்றுமதி மற்றும் மருத்துவ குணம் கொண்ட மூலிகைகள் கடத்தல் தடுக்கப்பட்டது.

உலகளவில் வனப்பாதுகாப்புக்குறித்து நடந்த முதல் கூட்டு நடவடிக்கை டிராம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# பாகிஸ்தானில் கார் குண்டு தாக்குதல் 11 பேர் பரிதாப பலி; 61 பேர் படுகாயம்



பாகிஸ்தானில் பொலிஸ் கட்டடத்தின் மீது வெடிகுண்டு நிரம்பியகாரை மோதச்செய்து பயங்கரவாதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 11 பேர் பலியாகினர்; 61 பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் லாகூரில் மாடன் டவுண் என்ற இடத்தில் பொலிஸ் புலனாய்வு அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டடத்தின் மீது நேற்று முன்தினம் காலை 8.15 மணியளவில் வெடி குண்டுகள் நிரப்பிய காரை பயங்கரவாதி ஒருவன் மோதச் செய்தான். இச்சம்பவத்தில் இரண்டு மாடிகளைக் கொண்ட அக்கட்டடம் இடிந்து விழுந்தது.

இந்தப் பயங்கரத் தாக்குதலில் அப்பகுதியில் 8அடி ஆழமும் 20அடி அகலமும் உள்ள ஒரு பெரியகுழி உருவானது. தாக்குதல் நடத்தப் பயன்படுத்திய காரில் 800 கிலோ வெடி பொருட்கள் இருந்திருக்கக் கூடும் என அதிகாரிகள் கருதுகின்றனர்.

இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலில் இரண்டு பெண்கள், ஒரு சிறுமி உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர். 61பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 29 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. காயமடைந்தவர்களில் 13 பேர் பெண்கள். கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி மேலும் சிலர் உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. (ஓ-4)

# பிரான்ஸில் கண்ணீர் விடும் மேரி மாதா உருவப்படம்

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசை சேர்ந்தவர்ஈசாத் அல்டின்டாக்லு. இவரது மனைவி செவின். கடந்த 2006 ஆம் ஆண்டு பிறந்த நாளின் போது இவருக்கு லெபனானை சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பாதிரியார் மேரி மாதா உருவப் படத்தை பரிசாக வழங்கினார்.

அந்த படம் சுமார் ஒரு அடி உயரம் உடையது. கடந்த மாதம் பெப்ரவரி 12 ஆம் திகதியில் இருந்து அந்த படத்தில் உள்ள மேரி மாதாவின் கண்களில் இருந்து எண்ணை போன்று கண்ணீர் வழிய தொடங்கியது.

தொடக்கத்தில் இதை அறிந்த அக்கம் பக்கத்தினர் வந்து ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர். மேரி மாதா படத்தின் முன்பு மனம் உருக பிரார்த்தனை செய்தனர்.

இந்த தகவல் காட்டு தீ போன்று பரவியது. உடனே பாரீஸ் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து தினமும் 50 முதல் 100 பேர் வரை வந்து பார்த்து செல்கின்றனர். இச் சம்பவம் பிரான்ஸ் மட்டுமின்றி ஐரோப்பா கண்டம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2-6)



வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வன்னி மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி யாவிஸ் அடிகளார் நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும், மீளக்குடியமர்ந்த பெண்மணி ஒருவர் தனது அனுபவத்தை பகிர்ந்து கொள் வதையும் பதுளை ஆயர் ஹரல்ட் அன்ரனி பெரேரா சூரிய மின்கலத்தை பெண் ஒருவருக்கு வழங்குவதையும், யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் நீர் இறைக்கும் இயந்திரத்தை பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும், ஆயர்கள் மக்களுக்கு இறையாசி வழங்குவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.


நாளை முதல் உங்கள் வலம்புரியில்

சென்னைப் பல்கலைக்கழக இந்திய
இசைத்துறைத்தலைவர்
முனைவர்-பிரமிளா மூர்த்தியின்
"இசையியல் நோக்கில் யாழ் நூல்"
ஆய்வுக்கட்டுரை இடம்பெறும்


# கடவுச்சீட்டு விசா இல்லாத இலங்கை வாலிபர் கைது

(மயிலாடுதுறை)

மயிலாடுதுறை அருகே கடவுச்சீட்டு விசா இல்லாமல் சுற்றிய இலங்கை வாலிபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

நாகை மாவட்டம் பூம்புகார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முருகன் தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு ரோந்து பணியில் ஈடுபட்டனர். பூம்புகார் பஸ் நிலையம் அருகே சந்தேகப்படும் படி நின்று கொண்டிருந்த ஒருவரை பிடித்து விசாரித்துள்ளனர். விசாரணையில் அவர் இலங்கை திருகோணமலை பத்தாங்குறிச்சியை சேர்ந்த சூரியகுமார் (45) என்றும் அவர் குடும்பத்தினருடன் பல ஆண்டுகளுக்கு முன் படகு மூலம் மண்டபம் வந்து பின்னர் காரைக்கால் பகுதியில் குடியேறியதும் தெரியவந்தது.

அக்கறைபேட்டை, நம்பியார்நகர், வேளாங்கண்ணி ஆகிய பகுதிகளில் மீன்பிடி தொழில் செய்தும், சூரியகுமாரை 1991 ஆம் ஆண்டு நாகூர் பொலிஸாரும் 1992 ஆம் ஆண்டு சேது பாவாசத்திரம் பொலிஸாரும் 1993 ஆண்டு நாகை கியூ பிரிவு பொலிஸாரும் கைது செய்ததும் 2007 ஆம் ஆண்டிலிருந்து அவர் தலை மறைவாக இருந்ததும் தெரியவந்தது.

தற்போது சூரியகுமார் மீது பூம்புகார் பொலிஸார் வழக்கு பதிந்து அவரை கைது செய்து சீர்காழி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினார் .வழக்கை விசாரித்த நீதிபதி 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார். (2-4)

# கடலில் தத்தளித்த தமிழக மீனவரை மீட்ட இலங்கை கடற்படையினர்

(இராமேஸ்வரம்)

நடுக்கடலில் தத்தளித்த தமிழக மீனவரை இலங்கை கடற்படையினர் மீட்டு யாழ் போர்த்னா மருத்துவமனையில் சேர்த்தனர்.

இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தை சேர்ந்த எட்வர்டுக்கு சொந்தமான படகில் முனியசாமி, நாகலிங்கம், நாகநாதன், களஞ்சியம், ஜான் பிரிட்டோ ஆகியோர் இரட்டைமடி மூலம் மீன் பிடிக்க சென்றனர். நள்ளிரவில் படகில் இருந்து மீனவர் களஞ்சியம் தவறி விழுந்து கடலில் மூழ்கினார்.

இவரை தேடிப்பார்த்த மற்றவர்கள் உடனடியாக படகு உரிமையாளருக்கு தகவல் கொடுத்தனர். நேற்று முன்தினம் காலையில் படகு கரை திரும்பியதும் மீனவர் கடலில் மூழ்கியது குறித்து அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டது.

இந்நிலையில் நடுக்கடலில் உயிருக்கு போராடிய களஞ்சியத்தை ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாகவும் தற்போது அவர் அங்கு நலமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2-4)

# வடக்கில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான 10 ஆலைகள்

## பாரிய அளவில் நிறுவ அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கில் பாரிய அளவிலான 10 தேங் காய் எண்ணெய் உற்பத்தி ஆலைகளை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளது.

பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் டி.எம்.ஜயரத்னவின் ஆலோசனைக்கு ஏற்ப தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் முல்லைத்தீவு, கிளிநொச்சி அளம்பில் மற்றும் பளை ஆகிய பிரதேசங்களில் இந்தத் 10 தொழிற்சாலைகளும் அமைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு குறிப்பிட்ட தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதுடன் அதன் மூலம் நாளொன்றுக்கு 20 மெட்ரிக்தொன் தேங்காய் எண்ணெய்யை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி பருத்தித்துறை சேகரம் அல்வாய் மெதடிஸ்த ஆலயத்தின் 94 ஆவது திருப்பணி ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நன்றிசெலுத்தும் வழிபாடும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)


வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# அறிவித்தல்

வெளிநிலைத் தேர்வுநாடிகளின் பதிவேடுகள்

1. கலை முதற் தேர்வு
2. வணிக முதற் தேர்வு
3. கலைமாணி பகுதி – I
4. வணிகமாணி பகுதி – I
5. இசைமாணி
6. நடனமாணி
7. வியாபார முகாமைத்துவமாணி (இணையவழி)

மேற்படி வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கு 2008/2009 ஆம் கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வுநாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய மாணவர் பதிவேட்டினை 15.03.2010 (திங்கட்கிழமை) முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:** பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும் கல்வித் தகமைச் சான்றிதழினதும் (க.பொ.த உயர்தரம்) மூலப்பிரதிகளை சமர்ப்பிக்காதோர் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்

09.03.2010 (சி/4630)

# தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அநேக தேர்தல் காரியாலயங்கள் அமைப்பு

## கண்காணிப்பாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அநேகமான தேர்தல் காரியாலயங்கள் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய அரசியல் கட்சிகளும் சுயாதீனக் குழுக்களும் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் தமது கட்சிக்காரியா லயங்களை அமைத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அநேகமான கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையிலும் கூடுதலான அளவில் காரியாலயங்களை அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தேர்தல் தொகுதியில் ஒரு கட்சிக் காரியாலயத்தையே அமைக்க முடியும் என குறிப்பிடப்படுகிறது.

மாத்தறை நகரில் ஒரே கட்சி 15 தேர்தல் காரியாலயங்களை அமைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் காரியாலயங்களை அமைப்பது தொடர்பில் நான்கு விண்ணப்பங்களே கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் அநேகமான அரசியல் கட்சிகளும் சுயாதீனக் குழுக்களும் தமது கட்சிக் காரியாலயங்களை பதிவு செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# ஜனநாயகவிரோத செயல்களுக்கு எதிராக குரல் கொடுத்தால் சிறைப்படுத்தப்படும் ஆபத்து

## மாற்றியமைக்க வேண்டும் என்கிறார் அனோமா

(கொழும்பு)

ஜனநாயக விரோத செயற்பாடுகள் நாட்டில் தலை தூக்குகின்ற பொழுது அதற்கெதிராக குரல் கொடுக்கும் ஆண்களை சிறை வைக்கும் ஆபத்தானதோர் சூழல் தற்போது உருவாகியுள்ளது. இத்தகைய ஜனநாயக விரோத செயல்களுக்கு கணவன்மாரையும் பிள்ளைகளையும் சகோதரர்களையும் பலி கொடுக்கும் காலத்தை மாற்றியமைக்க வேண்டுமென அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

குற்றமற்ற நிலையில் ஜெனரல் பொன்சேகா சிறை வைக்கப்பட்டுள்ளார். முன்னாள் இராணுவ தளபதிக்கே இந்நிலை என்றால் சாதாரண பொது மக்களின் நிலையை சிந்தித்துப் பார்க்கவே முடியாது என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் பொது நூலகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அனோமா பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், நூறாவது ஆண்டு மகளிர் தினத்தை சர்வதேச ரீதியில் பெண்கள் கொண்டாடினார்கள். ஆனால் இலங்கை வாழ் பெண்கள் எந்த நிலையில் உள்ளார்கள் என்று புதிதாக ஒன்றும் கூறத் தேவையில்லை. அநீதிகள் மேலோங்கி பொய்ப்பிரசாரங்களும் அடக்கு முறைகளும் இலங்கையில் தலைவிரித்தாடுகின்றது.

இதற்கெதிராக குரல் கொடுப்பவர்களை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் அல்லது குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைக்கென கூட்டிச் சென்று பலவந்தமாக சிறைகளில் தடுத்து வைக்கின்றனர். இந்த நிலையே ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கும் ஏற்பட்டுள்ளது. இது போன்று பல அசாதாரண சிறை வைப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

எனவே இலங்கையில் தற்போது காணப்படும் ஆபத்தான சூழ்நிலையில் பெண்கள் அணிதிரள வேண்டும். எமது பங்களிப்புக்கள் கட்டாயமாக காணப்பட வேண்டும். இல்லையென்றால் எதிர்வரும் நாட்களில் பலர் சிறை வைக்கப்படுவார்கள். இன்னும் பலரின் உயிர் காவு கொள்ளப்படும். பணத்திற்காக காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடக்கூடாது. எம்முன் உள்ள சவால்களை எதிர் கொள்ளக் கூடியவாறு எமது கரங்கள் மேலோங்க வேண்டும் என்றார். (ஓ-4)

# எக்னெலிகொட தொடர்பில் இருவாரங்களுக்குள் தகவல் வெளியிடப்படும்

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமல் போன லங்கா ஈ.நியூஸ் இணையத்தள ஆசிரியர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் தகவல் வெளியிடப்படும் என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊடகவியலாளர் காணாமல் போன சம்பவம் குறித்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுத் திணைக்களம் விசாரணைகளை நடத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி வரையில் மிரிஹான பொலிஸாரால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தனது கணவரை கண்டு பிடித்துக்கொடுக்குமாறு ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனைவி பல்வேறு தரப்பினருக்கும் முறைப்பாடுகளை தெரிவித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது. (2-4)

# ஆசிரிய உதவியாளர் சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் ஆசிரிய உதவியாளர் நியமனம் கிடைக்கப்பெற்ற அனைவரும் ஆசிரியர் பயிற்சி கலாசாலை செல்வது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சையும் சந்திக்கவுள்ளதால் அனைத்து ஆசிரிய உதவியாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவியாளர் சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (2-4)




# மார்க்கிஸ்ட் மூத்த தலைவர் வரதராஜன் தற்கொலை செய்து கொண்டார்

## பிரேத பரிசோதனையில் உறுதி

சென்னை மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் உ.ரா. வரதராஜன் கடந்த மாதம் 11 ஆம் திகதி காணாமல் போனார். இதுகுறித்து கமிஸனர்



ராஜேந்திரனிடம் வரதர்ாஜனின் மனைவி சரஸ்வதி புகார் செய்தார்.

இந்நிலையில் 13 ஆம் திகதி அவரது உடல் பேரூர் ஏரியில் கண்டெடுக்கப்பட்டது. உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அவரது குடல் பகுதி தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. குடல் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையை மத்திய குற்றப் பிரிவு பொலிசாரிடம் டாக்டர்கள் நேற்று முன்தினம் அளித்தனர்.

இதுகுறித்து சென்னை பொலிஸ் கமிஸனர் ராஜேந்திரன் கூறியதாவது, குடல் பரிசோதனையில் அவர் விசம் சாப்பிடவில்லை என்பது உறுதியானது. பிரேத பரிசோதனையில் அவர் நீரில் மூழ்கியதால் மூச்சுத் திணறியே இறந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. உடலில் சிறு சிறு காயங்கள் உள்ளன. ஆனால் அதனால் மரணம் ஏற்படவில்லை. அவர் உடல் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் அவரது உடலை பிரேத பரிசோதனை செய்த டாக்டர்கள் ஆய்வு செய்தனர். ஏரிக்குள் சென்னை நகருக்கு தண்ணீர் கொண்டு வரும் பெரிய பைப்புக்கள் உள்ளன. அந்த பைப்புக்கள் செல்ல ஒரு அடி அகலத்தில் பாதை உள்ளது. அந்த பாதையில் வரதராஜன் நடந்து சென்று தண்ணீரில் விழுந்துள்ளார். அப்போது அடிபட்டு காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று டாக்டர்களின் ஆய்வில் தெரிய வந்தது அது சிறு காயங்கள்தான் அதனால் அவர் தற்கொலை செய்து கொண்டது பிரேத பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு ராஜேந்திரன் தெரிவித்தார். (ஓ-4)

# பாரதச் செய்திகள்

# மேட்டு பாளையத்தில் பஞ்சு மில்லில் பயங்கர தீ விபத்து ரூ 10 கோடி பஞ்சு எரிந்து நாசம்



மேட்டுபாளையத்தில் நள்ளிரவில் தனியார் பஞ்சு மில்லில் ஏற்பட்ட தீ விபத்தில் ரூ.10 கோடி மதிப்பிலான நூல் பஞ்சுகள் எரிந்து சேதம் அடைந்தன.

கோவை மாவட்டம் மேட்டுபாளையத்தில் இருந்து தனியாருக்கு சொந்தமான ஸ்பின்னிங் மில் ஒன்று உள்ளது. இங்கு டர்க்கி டவல்கள் தயாரிக்க தேவையான நூல்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு மூலப் பொருட்களான பஞ்சு மகாராஸ்டிரா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்றன.

இந்த மில்லையொட்டி கொட்டன் மற்றும் நூல் குடோன் ஒன்றும் உள்ளது. குடோனில் மில்லில் உற்பத்தி செய்யப்பட்ட நூல் மற்றும் மூலப்பொருட்களான கொட்டன் பேல்கள் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடந்த ஞாயிறன்று நள்ளிரவு 2.30 மணி அளவில் குடோனில் இருந்து லேசான கரும்புகை வெளியே வந்தது.

இதை பார்த்ததும் தீயணைப்பு நிலையத்துக்கும் மற்றும் பொலிஸ் நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தனர். இதற்கிடையில் மில்லில் தீ பிடித்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த பஞ்சு மற்றும் நூலில் தீ பிடித்தது. சிறிது நேரத்தில் தீ வேகமாக பரவி மற்ற பேல்களிலும் பிடித்தது. இதனால் மில் முழுவதும் செந்நிற சுவாலையுடன் கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது.

தீயின் வெப்பம் தாங்காமல் குடோனின் ஜன்னல் கண்ணாடிகள் பயங்கர சத்தத்துடன் வெடித்து நாலாபுறமும் சிதறின. கட்டிடத்தின் சுவர்களிலும் விரிசல் ஏற்பட்டது. குடோன் அருகில் யாரும் எளிதில் செல்ல முடியாத அளவுக்கு அனல் வீசியது. 50க்கும் மேற்பட்ட தீயணைப்பு படை வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மதியம் 2 மணிக்கு தீ மேலும் பரவாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆங்காங்கே ஒரு சில இடங்களில் கட்டுக்கடங்காமல் தீ எரிந்து கொண்டே இருந்தது. தீ விபத்தின் காரணமாக எந்த நேரத்திலும் விழும் நிலையில் மில்லின் சுவர்கள் இருந்தன. இதனால் ஜே.சி.பி வாகனம் மூலம் கட்டிடம் இடித்து தள்ளப்பட்டது.

பின்னர் அதே வாகனத்தின் உதவியுடன் எரிந்து சாம்பலான நூல் மற்றும் பஞ்சு பேல்கள் அகற்றப்பட்டன. தொடர்ந்து தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டு வந்தனர். குடோன் முழுவதும் எரிந்து மேற்கூரை இரும்பு சட்டங்கள் மட்டும் எலும் புக்கூடு போல் உருக்குலைந்து காணப்பட்டன.

இந்த தீ விபத்தில் ரூ.10 கோடிக்கு மேல் நூல் மற்றும் பஞ்சு பேல்கள் எரிந்து நாசம் அடைந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் மேட்டுபாளையம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-4)

# இந்தியாவில் பெண்கள் சதவீதம் மிகக் குறைவு- ஐ.நா.தகவல்

ஆசிய பசுபிக் நாடுகளில் இந்தியாவில் தான் பெண்கள் சதவீதம் மிகவும் குறைவாக உள்ளது என ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட (யு.என்.டி.பி) ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

பாகிஸ்தான், வங்க தேசம், ஜப்பான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் பெண்கள் சதவீதம் குறைந்து காணப்படுகிறது. இது தொடர்பாக யு.என்.டி.பி வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, இந்தியாவில் பெண்கள் பிறப்பு விகிதம் 48.2 சதவீதம் ஆகும். ஆனால் இந்த அளவு பாகிஸ்தானில் 48.5 சதவீதமாகவும் வங்கதேசத்தில் 48.8 சதவீதமாகவும் ஜப்பானில் 51.1 சதவீதமாகவும் உள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 4 கோடிக்கும் அதிகமான பெண்கள் காணாமல் போயுள்ளனர். அதே சமயம் காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை பாகிஸ்தானில் 61 இலட்சமாகவும் வங்கதேசத்தில் 32 இலட்சமாகவும் இருந்தது. இந்தியாவில் 1990 இல் ஆயிரத்திற்கு 83 குழந்தைகள் இறப்பு என்றிருந்த குழந்தைகள் இறப்பு விகிதம் 2006 இல் ஆயிரத்துக்கு 57 ஆக குறைந்துள்ளது.

இந்திய மக்கள் தொகையில் 0.3 சதவீதம் பேர் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 15 முதல் 49 வயதிற்குட்பட்டவர்கள். எச்.ஐ.பி பாதிப்பு பாகிஸ்தானில் 0.1 சதவீதமாகவும் வங்கதேசத்தில் 0.5 சதவீதமாகவும் உள்ளது என அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு திருப்பதி கோயில் பிரசாதம்

திருப்பதி திருமலை தேவஸ்தானம் சார்பில் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு வெங்கடாசலபதியின் தங்கச்சிலை மற்றும் லட்டு பிரசாதம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது பற்றி திருப்பதி திருமலை தேவஸ்தான தலைவர் டி.கே.ஆதிகேசவலு நாயுடு நிருபர்களிடம் கடந்த திங்கட்கிழமை கூறியதாவது. திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் பல்வேறு பகுதிகளிலும் கல்யாண உற்சவம் நடத்தப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் நியூஜெர்ஸி நகரிலும் இந்தச் சிறப்பு உற்சவம் நடத்தப்படவுள்ளது. இதற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இதற்கான அழைப்பிதழ் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு வழங்கப்படும். அவர் ஏற்பதாக இருந்தால் அவருக்கு வெங்கடாசலபதியின் தங்கச்சிலை மற்றும் லட்டு பிரசாதம் ஆகியவையும் வழங்கப்படும் என்றார்.

மேலும் அடுத்த மாதம் 21 ஆம் திகதி தலைநகர் டில்லியில் கல்யாண உற்சவம் நடைபெறுகிறது. இதற்காகப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேவஸ்தான ஊழியர்களுக்கு விரைவில் ஆடை கட்டுப்பாடு அறிவிக்கப்பட்வுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (2-6)

# தமிழர் வரலாற்றை வெளிப்படுத்தும் விதத்தில் செம்மொழி மாநாட்டில் 30 அரங்குகள்

செம்மொழி மாநாட்டு கண்காட்சியில் 30 அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. சங்க காலம் முதல் தற்காலம் வரையிலான தமிழர் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தமிழ் நாடு பொதுக் கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் கண்காட்சி அமைப்புக் குழு ஏற்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி தமிழர் பண்பாடு, தமிழ் தொல்லியல், தமிழ் இலக்கியம் என மொத்தம் 6 பேராண்மை தலைப்புகளில் நடைபெறுகிறது. மேலும் உட்பிரிவுகளாக இசைத் தமிழரங்கம், நாடகத் தமிழரங்கம், திரைத் தமிழரங்கம், கலைஞர் தமிழரங்கம் ஓவியத் தமிழ் அரங்கம் என 30 அரங்குகள் அமைக்க்ப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சி அமைப்புக் குழு செய்து வரும் பணிகள் குறித்து குழுவின் ஒருங்கிணைப்பாளரும் கவிஞருமான தமிழச்சி தங்க பாண்டியன் கூறியதாவது, கண்காட்சியில் காட்சிப்படுத்த அசலான பொருட்கள், மாதிரிகள், நிழற்படங்கள், கணினி அட்டைகள், இட அளவு, அதற்கான செலவு, மதிப்பீடு ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தக் கருத்துரு, முதல்வர் கருணாநிதி தலைமையிலான தலைமைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

தமிழ் இலக்கியம் என்ற தலைப்பில் தற்கால இலக்கியத்தில் முக்கியமான ஆளுமைகள் பற்றி கண்காட்சியில் அசலான பொருட்கள். மாதிரிகள் வைப்பது பற்றி ஆலோசனை கொடுத்துள்ளேன். கதிர்வீச்சு (லேசர்) முறையில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தமிழ் அரங்கு அமைக்கப்படுகிறது. இத்துடன் தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் வழங்கப்பட்ட வரலாற்றை கலைஞர் செம்மொழி செப்பேடு என்ற நூலில் காணப்படும் செய்திகளை ஓவியமாகவும் செய்திக் குறிப்பாகவும் கொண்டு தனிச் சிற்றரங்கம் அமைக்கப்பட உள்ளது.

இது தவிர புத்தக கண்காட்சியும் நடத்தப்படுகிறது. சுமார் 20 ஆயிரம் சதுர அடியில் இந்தக் கண்காட்சி அமைக்கப்படுகிறது. உத்தரமே ரூரில் கல்வெட்டு குறிப்பிடும் குடவோலை முறையினை ஒலி - ஒளி காட்சியாக காண்பிக்க தனிச் சிற்றரங்கம் ஏற்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றார்.

செம்மொழி மாநாட்டு ஆயத்தப் பணிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் குழுக்களின் கருத்துக்களையும் முதல்வர் தலைமையிலான தலைமைக் குழு தான் இறுதி செய்யும்.

கண்காட்சி அமைப்புக் குழுவைப் பொறுத்தவரையில் தலைமைக் குழுவின் உத்தரவு கிடைத்ததும் இம்மாத இறுதியில் பணிகள் தொடங்கப்படும் என்றார். (2-4)



மகளிர் தினத்தைமுன்னிட்டு சென்னையில் இருந்து இலங்கை தலைநகர் கொழும்புக்கு முழுக்க முழுக்க பெண்களால் விமானம் இயக்கப்பட்டது. இதில் 110 பயணிகள் சென்றனர். புறப்படும் முன் உற்சாகத்துடன் கப்டன் தீபா (இடமிருந்து நான்காவது) தலைமையிலான பெண் ஊழியர்கள்.







உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பங்கு பற்றிய விருந்தினர்களையும் கௌரவவிருந்தினராக கலந்துகொண்ட யாழ். வலய உடற்கல்வி முதன்மை ஆசிரியர் த.சிவகுமார் மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்ற வீரருக்கு சான்றிதழ் வழங்குவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இலங்கை வங்கி சுன்னாகம் முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் வெற்றி பெற்ற இல்லத்துக்கான வெற்றிக்கேடயத்தை இல்லத் தலைவருக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# பலமான அரசாங்கமே எமது நாட்டிற்கு அவசியமானது-ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

எமது நாட்டுக்கு பலமான எதிர்க்கட்சி அவசியமில்லை. மாறாக பலமான அரசாங் கம் ஒன்றே தேவைப்படுகின்றது. பலமான எதிர்க் கட்சி உள்ள மூன்றாம் உலக நாடு எது என்று வினவுகின்றோம். நாட்டில் அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள மக்கள் எமக்கு தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான் மை பலத்தை பெற்றுக் கொடுப்பார்கள் என்று பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் விஷேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இறுதி யுத்தத்தின் போது எமது நாட்டுக்கு எதிராக செயற்பட்ட சில சக்திகள் பின்னர் ஜனாதிபதி தேர்தலின் போது சதிட்டங்களை மேற்கொண்டனர். ஆனால் ஜனாதிபதி தேர்தலில் மக்கள் 18 இலட்சம் வாக்குகளால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைத்தனர். கடந்த காலங்களில் ரணில் விக்ரம சிங்கவினால் தேர்தலில் வெற்றி பெற முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனால் கடந்த தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவினால் போட்டியிட முடியாத நிலைமையே ஏற்பட் டது.

தற்போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்க வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் செய் கின்றது. நாடொன்றில் தேர்தலின் போது இவ்வாறு கூறும் உலகிலேயே ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

நாட்டில் பலமான எதிர்க்கட்சி இருக்கக் கூடாது என்பதே எனது கருத்தாகும். பல மான எதிர்க்கட்சி உள்ள மூன்றாம் உலக நாடு ஒன்றை குறிப்பிட முடியுமா? எமது நாட் டுக்கு பலமான அரசாங்கமே தேவைப்படு கின்றது.

நாட்டின் யுத்தம் இறுதி கட்டத்தை அடைந்த போது அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்காத எதிர்க்கட்சி எதற்கு? நாங்கள் ஏன் மக்களிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கோருகின்றோம்? என்பதனை கூறுகின்றோம்.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்தோம். அவ்வாறு மீட்டெடுத்த நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதுவே எமது முன்னுள்ள இரண்டாவது பாரிய யுத்தமாகும். யுத்தத்தை வெற்றி கொண்டது போன்று இந்த பொருளாதார யுத்தத்தையும் வெற்றி கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை ஐக்கிய தேசிய கட்சியினால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும் என்ற மாயை மறைந்து போயுள்ளது. எமது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத் திடம் 1.9 பில்லியன் டொலர் கடனை கோரியது. ஆனால் எமக்கு 2.6 பில்லியன் டொலர்கள் கடனாக கிடைத்தன.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் சில திருத்தங்களை மேற்கொள்ளவும் அரசியலமைப்பில் சில மாற்றங்களை செய்யவும் தேர்தல் முறைமையில் மாற்றத்தை கொண்டு வரவும் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். ஓ

## தவக்கால பாதயாத்திரை

(குருநாகல்)

தவக்காலத்தை முன்னிட்டு வருடா வருடம் நடைபெற்று வரும் பாதயாத்திரையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு சென் ஜேம்ஸ் ஆலயத்தில் இருந்து பாத யாத்திரையாக சாட்டி சிந்தாத்துரை மாதா ஆலயத்திற்கு செல்லவுள்ளனர்.

இப் பாதயாத்திரையில் பங்கு கொள்ளும் பக்தர்களுக்காக விசேட ஆராதனையாக அன்றையதினம் காலை 10 மணிக்கு சிலுவைப் பாதை வழிபாட்டுடன் திருப்பலியும்ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-39)

## தடகள விளையாட்டு போட்டி தொடர்பானது

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் 57ஆவது ஆண்டு நிறைவையொட்டி எதிர் வரும் 13 ,14, 15ஆம் திகதிகளில் தடகளப் போட்டிகளை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் வீரர்கள் கழகங்கள் தமது விபரங்களை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு விளையாட்டுக்கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (14-24)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## செந்நாயுருவி

Botanical Name -Achyranthes aspera

Family - Amaranthaceae

Engl - Prickly chaff flower

Sinh - Karalsebo

30-90 செ.மீ உயரம் செங்குத்தாக வளரும் விறைப்பான் குறுஞ் செடியாகும்; இலைகள் எதிரிலையடுக்கில் இணைந்தவை; வெல்வெட் போன்ற தூவிகளால் மூடியவை; விறைப்பானவை;மலர்கள் இருபாலின; பச்சை வெண்மை கலந்தவை;நீளமான செங்குத்து மஞ்சரி காம்பில் தலைகீழாக அமைந்தவை; மலர்கள் பனிக்காலத்தில் தோன்றுகின்றன; கனிகள் கோடையில் உருவாகின்றன; கனிகள் ஒருவித சுரப்பு மூலம் மனிதர் மற்றும் விலங்குகளின் உடலில் ஒட்டி பரவும் தன்மையானவை.

### பரம்பலும் இனவிருத்தியும்

புஞ்சை நிலங்களில் ஏராளமாகவும், தன்னிச்சையாகவும் வளர்ந்து வருகின்றது. எல்லாவகை மண்களிலும் பயிராகக்கூடியது.விதைகள் மூலம் இனவிருத்தியடையக் கூடியது.

### மருத்துவ குணங்கள்

50 கிராம் சுத்தம் செய்த இலைகளை 100 கிராம் முளைக்கீரையுடன் சேர்த்து சமைப்பது நல்லது.அல்லது 50 கிராம் நாயுருவி இலை , 20 கிராம்தேங்காய்,80 கிராம் கோதுமைமாவுடன் சேர்த்து அடை தயாரிக்கலாம்.இதனால் சிறுநீர் நன்கு வெளி யேறும். வெள்ளை சாய்தல் தீரும்.

● இதன் இளம் செடியை (கதிர்விடாதபடி) வேருடன் எடுத்து மண்தூசிகளை நீர் கொண்டு அலசியாவும் சிதைத்து மண் பாண்டத்தில் 1 1/4 லீற்றர் நீர் விட்டு இதையும் போட்டு 120 மில்லி ஆக வற்ற வைத்து 30 மில்லி அளவு காலை, மாலை அருந்த சிறுநீர்நன்கு வெளிப்படும். இருமல் தணியும். இரத்தம் சுத்தியாகும். காய்ச்சிய குடிநீர் உஷ்ணமானால் சிறிது காய்ச்சிய பசும் பாலும் சீனியும் அள வோடு சேர்த்து பருகி வர காமாலைதீரும்.



● செழிப்பான இலைகளை எடுத்து மை போல அரைத்து சுண்டங்காயளவு காலையில் தயிரில் எடுக்க இரத்த மூலம், சீதபேதி தணியும். இதையேகட்டிகள், நாற்றமெடுக்கும் பழை யபுண்களுக்கும்வைத்துக் கட்டிவர குணமா கும்.

● பசும் தளிர் இலைகளை சேகரித்து வாரம் ஒரு முறை பருப்புடன் நெய் சேர்த்து பகல் உணவில் உட்கொள்ள நுரையீரல், கபம் (சளி) சம்பந்தப்பட்ட நோய்கள் தணியும்.

● நாயுருவி இலையின் நடுவில் இஞ்சித் (தோல்சீவிய) துண்டுகளைவைத்து அதை ஒரு இரவு பனியில் வைக்க இஞ்சி சுத்தியாகி நார் அற்றுப்போகும். இந்த இஞ்சியை உலர்த்தி இஞ்சித் தூள்செய்து வைத்துக்கொண்டு குழந்தைகட்கு 100 மீ.கி. வளர்ந்தவர்க்கு1-2 கிராம் அளவு கொடுக்க இருமல், சளி, காய்ச்சல் தீரும். வெந்நீரில் கொடுக்கவும்.

● மழை பெய்து இலைகள் செழிப்பாக வளரும் காலத்தில் இலைகளை நிறைய சேகரித்து இடித்து சாறு பிழிந்து கொள்ளவும். இந்தச் சாற்றை மெல்லிய பருத்திநூல் துணியில் நனைத்து பிழியாமல் அப்படியே உலர்த்தவும். இப்படி 7 முறை தோய்த்து அதே துணியின் மேற்படி சாறுகளை ஒற்றி உலர்த்தவும். திரியாக சுருட்டி வைத்துக்கொண்டு பசு நெய்யை பழகிய மண் அகலில் விட்டு சுருட்டி வைத்த திரியை அதில் போட்டு விளக்கு போல ஏற்றி எரி யும் புகையை வேறு ஒரு ஓட்டில் விளக்கெண்ணை தடவிப் பிடித்து வந்தால் புகை நிறையப் படியும். மேற்படி புகை யாவும் வழிந்த ஒரு கண்ணாடி குடுவையில் எடுத்து ஆமணக்கு எண்ணெயை அளவாக சேர்த்து மைபோல செய்து வைத்துக் கொண்டு தினம் இருவேளை கண் இமையில் மை தீட்டுவது போல தீட்டி வந்தால் பார்வைக் கோளாறுகள் விலகி கண்பார்வை தெளிவுறும்.

● நாயுரு வேரை பச்சையாக எடுத்து நன்றாக கழுவி தினமும் பல் துலக்கி வர பல் சுத்தமாகி வெண்மை நிறமாகும்.

● நாயுருச் செடி தேவையான அளவு எடுத்து உலர்த்தி கொளுத்திய சாம்பல் 500 கிராம், ஆண்பனை மரத்தின் பூமடல், அந்த மடல்களை சேகரித்து உலர்த்தி கொளுத்திய சாம்பல் 500 கிராம், ஆக 1000 கிராம் இனையும் ஒரு மட்பாண்டத்தில் 6 லீற்றர் நீர்விட்டு 15 நிமிடங்கள் நன்றாய் கரைத்து ஒரு மூலையில் பானையை அசையாமல் வைத்து மறுநாள் பார்க்க வண்டல் யாவும் அடியில் தங்கி நீர் மட்டும் தெளிந்து காணப்படும்.

நீரை மட்டும் எடுத்து இரண்டு பாகமாக பங்கிட்டு தனித்தனியாக வைத்து வாணலியை அடுப்பேற்றி தணலில் காயவிட்டு ஒரு பாகம் தெளிந்த நீரை வைத்துக் கொண்டு ஒரு கரண்டியில் மொண்டு காய்ந்து கொண்டிருக்கும் வாணலியில் விடவும் சிறிது நேரத்துக்குள் நீர் யாவும் சுண்டி விடும். சுண்டும் தருணம் மிகுதி நீரையும் அவ்வாறே விட்டு நீர் சுண்டி பிறகே விட்டு விட்டு ஒரு பாக நீரையும் எறிந்தால் ஓட்டில் உப்பு காணும். அந்த உப்பு யாவையும் எடுத்து சுரண்டி வேறு ஓட்டில் வைத்து மறுபடியும் அடுப்பில் வைத்து இரண்டாவது பாகம் வைத்திருக்கும் தெளி நீரை அந்த உப்பின் மேல் சிறுக சிறுக ஊற்றி யாவும் சுண்ட எரிக்க வேண்டும். நீர் யாவும் எரிந்த பிறகு கடைசியாக நீர் வற்றிப் போனவுடன் நாலு பிரட்டுப்பிரட்டி பிறகு வறுத்து எடுத்து ஆறியவுடன் நன்றாக அரைத்து எடுத்து காற்றுப்புகாத புட்டியில் அடைத்து வைக்கவும்.

100 மி.கி அளவு தேன், நெய் , அனுபானத்துடன் கொடுக்க பித்த உஷ்ண சம்பந்தமான நோய்கள் தீரும். இரைப்பையினுள் புண்ணை ஆற்றும். கச நோயாளிகளுக்கு சிறந்த மருந்தாகும். கச நோயாளிக்கு புளிக்காத தென்னங்கள், அனுபானத்துடன் 100 மி.கி நாயுருவி உப்புத்தூளை காலை மாலை கொடுக்கலாம்

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

இதயமும் நாவும் சிறியவைதான்–ஆனால், அவை ஒரு மனிதனின் உயர்வைக் காட்டு கின்றன. -ஜேர்மன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# உசார்த்தனங்கள் ஆபத்தாகவும் முடியலாம்

இலங்கையில் யுத்தம் முடிந்து விட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டாயிற்று என்றெல்லாம் அரசு கோஷம் செய்தாலும் ஐ.நா.சபையினதும் மேற்குலக நாடுகளினதும் இலங்கை மீதான இறுக்கம் தளர்ந்து விட்வில்லை.

இலங்கையில் போர்குற்றங்கள் நடந்துள்ளன என்ற குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதில் விசாரணை விளக்கம் என்பவற்றுக்குக்கப்பால் ஐ.நா.சபையை எச்சரிக்கும் பாங்கையே இலங்கை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வணுகு முறையானது உசார்தனத்தின் பாற்பட்டதேயன்றி அறிவுபூர்வமானதல்ல.

இலங்கையில் போர்க் குற்றம் நடந்துள்ளதென ஐ.நா.சபை கூறுவதை நிராகரிப்பதற்கு இலங்கை அரசுக்கு உரிமை உண்டு.

ஆனால் அதற்கான ஆதாரங்களை முன்வைக்க வேண்டும். அந்த ஆதாரங்கள் பக்கசார்பற்றவையாக–நீதி விசாரணையின் முடிபில் பெற்றதாக அமைவது மற்றவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு உதவும்.

இதைவிடுத்து இலங்கை மீது தலையிடுவதற்கு ஐ.நா.சபைக்கு அதிகாரம் இல்லை.

ஐ.நா.சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது எனக்கூறுவது உலகுடன் ஒத்திசையும் தன்மை இலங்கை அரசிடம் இல்லை என்பதை நிரூபிப்பதாகும்.

ஐ.நா.சபை என்பது உலகின் அமைதிக்காக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய அமைப்பு.

உலக மகா யுத்தம் தந்த அழிவை அடுத்து உலகில் அழிவு–அநீதி–அடக்குமுறை என்ற கொடூரங்கள் இல்லாத, அனைத்து மக்களும் சமஉரிமை பெற்று வாழ்வதனை உறுதி செய்வதற்கான உலகின் அங்கீகாரம் பெற்ற அமைப்பாக ஐ.நா.சபை தோற்றம் பெற்றது.

எனவே இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு ஐ.நா.சபைக்கு உரிமையில்லை எனக்கூறும் போது மறுபுறத்தில் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் சம உரிமையுடன் சுதந்திரமாக வாழ்கின்றார்களா? அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்ற கேள்வி எழுகிறது.

இங்கு தான் இலங்கை அரசு தவறு செய்கிறது. யுத்தம் முடிந்து விட்டது எனக் கூறும் அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வையும் வேகமாகச் செய்து முடித்திருக்குமாயின் மார்தட்டி கதைக்க முடியும்.

மாறாக இனப்பிரச்சினையை தீர்க்காமல் உள்விவகாரத்தில் தலையிடும் உரிமை ஐ.நாவுக்கு இல்லையெனக் கூறுவது, 'தமிழ் மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அவர்களுக்கு நீதி கிடைக்காது' என்பதை ஐ.நா. உறுதி செய்வதற்கு போதுமாக இருக்கும்.

# இந்நாட்டில் பெண்களின் பொருளாதாரம் சக்திப்படுத்தப்பட வேண்டும்– நாமல் ராஜபக்ஸ

(கொழும்பு)

இந்நாட்டில் பெண்களின் பொருளாதாரம் சக்தி படுத்தப்பட வேண்டும். அரசியலில் பொருளாதார ரீதியில் தொழில்நுட்பத் துறையில் பெண்கள் முன்னேற்றப்பட வேண்டும். அவர்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவும் பலப்படுவது மிகவும் முக்கியமாகும் என இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை சியபோபுர சிங்கப்பூர் நட்புறவு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற தேசிய மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்நாட்டில் இளைஞர்கள் படையிலிருந்து விடுமுறைக்கு வீட்டிற்கு வரும் போதும் பாடசாலை பல்கலைக்கழகத்துக்குப் போய் மீள வீடு திரும்பும்வரை பெற்றோர் அஞ்சி நடுங்கிய யுகம் ஒன்றிருந்தது. இதன்போது உள உடல் ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் எமது தாய்மாரே.

எமது சகோதரரும் கடற்படையில் கடமைபுரிவதால் பயங்கரவாத யுத்தம் இடம்பெற்ற காலத்தில் எமது பெற்றோரும் இத்தகைய தாக்கங்களுக்கே உள்ளானார்கள் என என்னால் கூறமுடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் பொருளா தாரத்தில் முக்கிய பங்களிப்பினை பெண்களே வழங்குகின்றனர். வீட்டின் பொருளாதாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றை இதில் முக்கியமாகக் குறிப்பிடமுடியும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு தற்போது அமைதி சூழல் நிலவுகிறது. இதனால் எமது கலாசாரம், தேசியத்துவம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

மேலும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான பலமான உறவு இல்லாவிட்டால் நாம் எத்தகைய அபிவிருத்தியை ஏற்படுத்தியும் அதில் பயனில்லை என்பதே எனது கருத்து. குடும்ப உறவு பலப்படுத்தப்படல், பொறுமை இவையிரண்டும் நல்ல குடும்பம், நல்ல பிள்ளைகள் உருவாக மிகவும் அவசியமாகும். குடும்பம் பலம்பெறும் போது சமூகம் பலம் பெறுகிறது. சமூகம் பலம் பெறும் போது கிராமம் பலம் பெறுகிறது. கிராமம் பலம்பெறும் போது நாடு பலம் பெறுகிறது. நாம் பலம் மிக்க நாடொன்றைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் உழைப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை 5 வீதமாக மட்டுப்படுத்த முடியாது–ஐ.தே.கட்சி

இந்த ஆண்டு வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை 5 வீதமாக மட்டுப்படுத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதற்கமைய வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில் 5 வீதமாக பேணும் அரசாங்கத்தின் முயற்சி நடைமுறைச் சாத்தியமற்றதென கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

வாழ்க்கைச் செலவு 97 வீதமாக உயர்வடைந்துள்ளதெனவும் 410 பில்லியன் ரூபாய் வர்த்தகக் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகக் கடன்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கைகளினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் வேட்பாளரும் சிரேஷ்ட பொருளியல் நிபுணருமான டாக்டர் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குடும்பமும் வெளிநாடுகளுக்கு தலா 83 லட்சத்து 35ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டிய நிலை காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர்; கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயத்துறைகளுக்கான அரச செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மொத்தத் தேசிய உற்பத்தியில் 7 வீதத்திற்குள் பாதீட்டு துண்டுவிழும் தொகையை பேண வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ள போதிலும் இம்முறை துண்டுவிழும் தொகை 10 வீதம் வரையில் உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-2-4)

## தேர்தல் வேட்பாளர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன

(கொழும்பு)

தேர்தல்கள் செயலகம் விநியோகிக்கும் விசேட அடையாள அட்டை இல்லாத வேட்பாளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்கோ அல்லது வாக்கெண்ணும் நிலையங்களுக்கோ செல்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது எனச் செயலகம் அறிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரத்தியேகமான அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. மாவட்ட தேர்தல் அத்தியட்சகரூடாக இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அதனைப் பெற்றுக் கொள்ளாத வேட்பாளர்கள் தமது அரசியல் பலத்தினை பயன்படுத்தி வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வர முயற்சிக்கக் கூடாது என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க கடுமையான உத்திரவினைப் பிறப்பித்துள்ளார். இது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

## சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கி, மீள் எழுச்சித்திட்டம், கைத்தொழில் அபிவிருத்தி சபை மூன்றும் இணைந்து வடபகுதியில் சுயதொழிலுக்கான கடன் வழங்கல் தொடர்பான ஆரம்பகூட்டம் ஒன்றினை கடந்த 05 ஆம் திகதி மொறட்டுவவில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபை தலைமைக் காரியாலயத்தில் நடத்தியது

இக்கூட்டத்தின் தீர்மானத்திற்கமைவாக வடபகுதியில் சுயதொழில் முயற்சியினை மேற்கொள்பவர்களுக்கு கடன் வசதியினை ஏற்படுத்தி கொடுத்தல் தொடர்பான கலந்துரையாடலை இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிரதேசங்களில் நடத்துவதற்கு நிறுவன தலைமை அதிகாரிகளால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (30-2)

## வணிகமாணிப் பட்டதாரிகளின் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட வணிகமாணி பரீட்சையில் சித்தியடைந்து வணிகமாணிப் பட்டம் பெறுவோரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைப்பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார்.

இப் பரீட்சையில் 49 பேர் வணிகமாணிப் பட்டம் பெற்றுள்ள அதேவேளை இவர்களில் 4 பேர் இரண்டாம் தரம் கீழ்ப் பிரிவில் சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மதமும் ஒழுக்கமும்



இருளடைந்த முகங்களோடு உனக்கு என்ன தொடர்பு வேண்டியிருக்கிறது? அப்படி இருப்பது பயங்கரமானது. உன் முகத்தில் இருள் சூழ்ந்திருந்தால், அன்றைய தினம் நீ வெளியே போகாமல் உன் அறையின் கதவை மூடிக்கொண்டு உள்ளேயே இரு. வெளியுலகத்திற்கு இந்த நோயைச் சுமந்து கொண்டு போவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

தீர்க்கதரிசிகளின் ஆற்றல் எங்கே இருந்தது என்பதை உலக வரலாற்றிலிருந்தே நீ அறிந்ததில்லையா? அது எங்கே இருந்தது? அவர்களின் அறிவாற்றலிலா இருந்தது? அவர்களில் எவராவது தத்துவத்தைப் பற்றியோ, மிகவும் நுட்பமான தர்க்க நியாயங்களைப் பற்றியோ, அருமையான ஒரு நூலாவது எழுதியிருக்கிறார்களா? அவர்களில் ஒருவருமே அப்படி எதுவும் எழுதியதில்லை. ஒரு சில வார்த்தைகளை மட்டுமே அவர்கள் பேசினார்கள்.



டைனோசர் போலவே பாம்பினங்களும் அறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருவதாகக் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இப்போது உலகில் 2400 க்கும் மேற்பட்ட பாம்பு வகைகள் உள்ளன. இவை பெரும்பாலும் ஊர்ந்துதான் செல்லும்.

கிளைடர் விமானம் போல அசைந்தபடி பறக்கும் பாம்பும் இருக்கிறது. இதற்கு சிறகுகள் கிடையாது. ஆனால் இது உடலை விறைப்பாக நிமிர்த்திக்கொண்டு, கீழ்ப்பக்கமாக அழுத்தம் கொடுத்து கிளைடர் விமானம் போல சிறிது தூரம் பறக்கும். இவை தெற்காசிய நாடுகளில் காணப்படுகின்றன. இவை எலி, வௌவால்களைப் பறந்து சென்று பிடித்து உணவாக்கிக் கொள்ளும்.

### அருமையான ஐந்து

- உடல்நலம் குன்றியிருக்கும்போது மட்டுமே புறாக்கள் உறங்கும்.
- உலகில் 44 நாடுகளுக்குக் கடற்கரை கிடையாது.
- பகவத் கீதை 55 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.
- துக்கத்தின் நிறம் நம் நாட்டில் கறுப்பு; சீனாவில் வெள்ளை; துருக்கியில் நீலம் ; எகிப்தில் மஞ்சள்.
- ஒரேசமயத்தில் 17 தசைகள் இயங்கினால் தான் நாம் சிரிக்க முடியும்.



## விண்வெளி சிம்பன்சி

பிரத்தியேக உடை, ஹெல்மெட் பாதுகாப்பு அம்சங்களுடன் போஸ் கொடுக்கும் இந்த சிம்பன்சி குரங்கின் பெயர் ஹாம். 1959 முதல் 1965 வரை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (நாசா) சார்பில் புதன் கோளைச் பற்றி ஆராய 9 முறை விண்கலன்கள் அனுப்பி வைக்கப்பட்டன. முதல் 4 விண்கலன்களில் மனிதருக்கு பதிலாக விலங்குகளே அனுப்பப்பட்டன. 1961 ஜனவரி 31 அன்று மெர்க்குரி–ரெஸ்ட்டோன் 2 என்ற விண்கலத்தில் முதல்முறையாக சிம்பன்சி குரங்கு அனுப்பப்பட்டது. விண்கலனில் பயணிக்க ஹாம் அழைத்து வரப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது. விண்ணில் 3 மாதங்கள் தங்கிவிட்டு வெற்றி கரமாக 1961ஏப்ரல் மாதம் பூமிக்குத் திரும்பியது ஹாம்!

## ஐஸ் தவம்



மார்கழி குளிரையே நம்மால் தாங்க முடிவதில்லை. சீனாவைச் சேர்ந்த சென் கைமின் உடலில் ஒட்டுத் துணி இல்லாமல் ஒரு மணி நேரம் 52 நிமிடங்கள் ஐஸ்தாங்கியில் தவம் செய்துள்ளார். 53 வயதான இவர் 1989 ஆம் ஆண்டிலிருந்து ஐஸ் தவம் செய்வதை வாடிக்கையாகவே வைத்துள்ளார். 20 ஆண்டுகளில் முதல் முறையாக இப்போதுதான் அதிக நேரம் ஐஸ் தவத்தில் இருந்ததாகக் கூறுகிறார் செ…

## உலகிலேயே விலையுயர்ந்த செல்போன்

சுறு கட்டி கூவி விற்காத குறையாக செல்போன்கள் இன்று மகா மலிவாகி விட்டன. ஆனால் உலகிலேயே மிகவும் விலை அதிகமுள்ள செல்போனை இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த தங்க செல்போனில் விலை மிகுந்த வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன.



***ஐபோன் 3 ஜி சுப்ரீம்*** என்ற இந்த செல்போனை லிவர்பூல் கோல்ட் ஸ்ட்ரைக்கர் இன்டர்நேஸனல் என்ற நிறுவனத்துக்காக ஸ்டுவர்ட் ஹியூக்ஸ் என்பவர் வடிவமைத்திருக்கிறார். அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்று இதை வெளியிட்டிருக்கிறது. 22 கரட் தங்கத்தால் ஆன இந்த செல்போனின் முன்புறத்தில் 136 வைரங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

53 வைரங்களைக் கொண்டு அப்பிள் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது. முன்புறத்தில் பிரதான பட்டன் 7.1 கரட் மதிப்புள்ள ஓர் அரிய வைரத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒரு செல்போனை தயாரித்து முடிக்க 10 மாதங்களுக்கு மேல் ஆனது. இதை வைப்பதற்கான பெட்டி கூட மிகவும் விலையுயர்ந்த பொருட்களால் ஆடம்பரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செல்போனின் விலை பல கோடிகளைத் தாண்டுகிறது.

## AROUND THE WORLD உலகைச் சுற்றி

ஆர்.யூ.பாலமுருகன்

## ஆஹா எலி!




சிவப்பு நிறகண்கள்; வெள்ளை நிற ரோமம்; ***அணிலா முயலா*** என்று சொல்ல முடியாத அளவுக்கு கொள்ளை அழகுடன் காட்சியளிக்கும் இது அபூர்வ எலி. சீனா உட்பட தென் கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமே காணப்படுகிறது இந்த எலி இனம்.

உலகில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ள இந்த எலியின் அழகைப் பாருங்களேன்.

ச்சோ சுவீட்!

## பள்ளங்கள் பல விதம்



நிலத்தில் பள்ளம் இருப்பதை பார்த்திருக்கிறோம். கடலிலும் மெகா பள்ளம் இருப்பது வியப்பு தானே! கரீபியன் தீவு கடல் பகுதியில் அம்பர் கெய் என்ற இடத்தில் மிகப் பெரிய பள்ளம் உள்ளது. இந்த இடம் முன்பு ஒரு சிறிய தீவாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் சுண்ணாம்புக் குகை ஒன்றை அங்கு உருவாக்கினர். நாளாக நாளாக இந்தக் குகை இடிந்து விழுந்து பெரிய பள்ளமாக மாறியது. ஒரு கட்டத்தில் கடல் மட்டம் உயர்ந்து சுண்ணாம்புக் குகையை கடல் விழுங்கியது. இப்போது 120 மீற்றர் ஆழமும் 300 மீற்றர் சுற்றளவும் கொண்டதாகக் காட்சியளிக்கிறது ப்ளூ ஹோல்!

## ஹடினின் சிறப்பான சதம்

# மூன்றாவது போட்டியில் ஆஸி நியூசிலாந்து அணியை வீழ்த்தியது



சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில் இரண்டாவது சதமடித்த மகிழ்ச்சியில் ஹடின்.

(ஹமில்ரன்)

ஹடினின் சிறப்பான சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி மூன்றாவது ஒருநாள் போட்டியில் 6விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2இருபது- 20, 5ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடர் சமனிலையான நிலையில் தொடர்ந்து நடைபெற்ற முதலிரண்டு ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற்றன.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று ஹமில்ரனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46.2ஓவர்களில் 245ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ரோஸ் ரெய்லர் 66பந்துகளில் (4 பவுண்டரிகள், 2சிக்ஸ்சர்கள் உட்பட) 62ஓட்டங்களையும், ஹோப்கிங்ஸ் 45,ஸ்ரைரிஸ் 41ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹரிஸ், ஜோன்ஸன் ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும், வோட்ஷன் 2விக்கெட்டுக்களையும், பொல்லிங்கர் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஹடின், பொன்டிங்கின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 47.2ஓவர்களில் 4விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 248ஓட்டங்களை எடுத்து 6விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் பிரட் ஹடின் 121பந்துகளில் (7பவுண்டரிகள்,5சிக்ஸர்கள் உட்பட) 110ஓட்டங்களையும்,அணித்தலைவர் பொன்டிங் 71பந்துகளில் (9பவுண்டரிகள் உட்பட) 69 ஓட்டங்களையும்,வைற் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சௌத்தி, மேஷன், அணித்தலைவர் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழியமைத்த பிரட் ஹடின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5போட்டிகள் கொண்ட தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

## ஐ.பி.எல். தொடரில் வாய்ப்பையிழந்தார் ஜடேஜா

மூன்றாவது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது-20 தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தார் ரவீந்திர ஜடேஜா. இந்தியாவில் மூன்றாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. கடந்த இரண்டு முறை ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடி வந்தார் இளம் சகல துறை வீரர் ரவீந்திர ஜடேஜா.

இவரது ஒப்பந்த காலம் கடந்த ஆண்டு டிசம்பருடன் முடிபுக்கு வந்தது. இந்நிலையில் தனது ஒப்பந்தத்தை புதுப் பிக்காமல் வேறு அணியுடன் ஒப்பந்தம் செய்ய ஜடேஜா முயன்றார். இது ஐ.பி.எல். விதிமுறை களின்படி குற்றமாகும்.

இதனால் அவருக்கு ஐ.பி.எல். நிர்வாகம் ஒரு ஆண்டு காலம் தடை விதித்தது. இந் நிலையில் தடையை எதிர்த்து இந்தியன் கிரிக்கெட் சபையிடம் (பி.சி.சி.ஐ) ஜடேஜா மேன்முறையீடு செய்திருந்தார். இது குறித்து நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது. ஆனால் பி.சி.சி.ஐ தலைவர் மனோகர், விவகாரத்தில் எதுவும் செய்ய முடியாது என கை விரித்து விட்டார். இதனால் இம் முறைஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தார் ஜடேஜா.

## 'இருபது-20' உலகக் கிண்ணம் இலங்கை அணியில் கண்டாம்பி நீக்கம்

இருபது-20 உலக கோப்பை தொடருக்கான உத்தேச இலங்கை அணியில் இருந்து முன்னணி வீரர் கண்டாம்பி நீக்கப்பட் டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் வரும் ஏப் ரல் மாதம் உலக கோப்பை இருபது-20 தொடர் நடக்கிறது. இதில் பங்கேற்கவுள்ள இலங்கை அணியின் 30வீரர்கள் பெயர்கள் அடங்கிய பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.



இதில் கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிராக நடந்த இருபது-20 தொடரில் சேர்க்கப்படாத திரான் கண்டாம்பி உலக கோப்பை தொடரில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளது எல்லோருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அணியின் தலைவராக சங்கக்கார தொடர்ந்தும் நீடிக்கிறார். தவிர டில்ஷான், ஜெயசூர்யா, ஜெயவர்தனா, கபுகேதர, மத்யூஸ், பெரேரா, முரளிதரன், மெண்டிஸ், மலிங்க, பெர்னாண்டோ, குலசேகரா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர். 15வீரர்கள் அடங்கிய இறுதிப்பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மூன்றாவது ஐ.பி.எல். தொடரை சென்னை சுப்பர் கிங்ஸ் கைப்பற்றும்

### அணித்தலைவர் தோனி நம்பிக்கை

(சென்னை)

இளம் வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான அடித்தளத்தை ஐ.பி.எல். போட்டிகள் வழங்குகிறது என சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி தெரிவித்துள்ளார். ஐ.பி.எல். மூன்றாவது இருபது-20 கிரிக் கெட் நாளைமறுதினம் ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி வரை இந்தியா முழுவதும் பல் வேறு இடங்களில் நடக்கிறது. இந்தத் தொடரில் பங்கேற்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்களின் அறிவிப்புக் கூட்டம் நேற்று முன் தினம் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திர சிங் தோனி பேசியதாவது, ஐ.பி.எல் தொடரைப் பொறுத்த வரை கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வருகிறோம். முதல் ஐ.பி.எல். தொட ரில் இரண்டாமிடம் பிடித்தோம். இரண்டாவது ஐ.பி.எல். தொடரில் அரையிறுதி வரை முன்னேறியுள்ளோம். இருபது-20 கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத் தவரை அனைத்து ஓவர்களுமே முக்கியமானது. இந்த ஆட்டத்தில் 15நிமிட இடைவெளியில் என்ன மாற்றம் வேண்டுமானாலும் நிகழும். அதனால் எந்த அணியையும் குறைத்து மதிப் பிட முடியாது.

தற்போதைய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் ஹைடன், மைக்கல் ஹசி, சுரேஷ் ரெய்னா, ஜஸ்டின் கெம்ப் போன்ற சிறந்த பேட்ஸ்மேன்கள் உள்ளனர். ஜேக்கப் ஓரம் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இவரது பங்களிப்பு அவர் குணமாவதைப் பொறுத்தது. மேலும் பந்துவீச்சாளர் வரிசையில் முரளிதரன், நிற்னி, சுதீப் தியாகி ஆகியோரது செயல் பாடுகள் திருப்திகரமாக உள்ளன. சென்னையின் தட்ப வெப்பநிலை சற்று கடினமானது. இரவு 8மணிக்கு விளையாடும் போது கூட உஷ்ணத்தை உணர முடியும். உள்நாட்டிலேயே போட்டிகள் நடப்பதால் ரசிகர்களின் ஆதரவு இருக்கும்.

இது வீரர்களுக்கு உற்சாகத்தை அளிக் கும். இளம் வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான அடித்தளத்தை ஐ.பி.எல். போட்டிகள் வழங்கு கிறது. இந்த ஐ.பி.எல். தொடரில் வெற்றிபெற ஆவலாக உள்ளோம். வீரர்களுக்கு வழங்கப் படும் பாதுகாப்பு திருப்திகரமாக உள்ளது.

**சென்னைசுப்பர்கிங்ஸ்உத்தேசஅணிவருமாறு,**

மகேந்திர சிங் தோனி அணித்தலைவர், ஹைடன், சுரேஷ் ரெய்னா, மைக்கல் ஹசி, அனிருதா ஸ்ரீகாந்த், பத்ரிநாத், ஜோர்ஜ் பெய்லி, அருண் கார்த்திக், சிவராமகிருஷ்ணன், அபினவ் முகுந்த், முரளி விஜய், பிளின் டொப், ஜேக்கப் ஓரம், அல்பி மோர்கல், பார்த் திவ் பட்டேல், கெம்ப், பெரேரா, பதானி, சதாப் ஜகாதி, விராஜ் கட்பே,

சுரேஷ்குமார், நெப்போலியன் ஐன்ஸ்டீன், முரளிதரன், ஜொகிந்தர் சர்மா, நிற்னி, திலான் துஷாரா, ரவிச்சந்திரன் அஸ்வின், மன்பிரீத் கோனி, பாலாஜி, பழனி அமர்நாத், சுதீப் தியாகி, சந்திரசேகர் கணபதி மற்றும் மோகன் காந்தி.



யாழ்.மாவட்ட சிவில் அலுவலகங்கள், பொதுமக்கள் தொடர்பு அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர்க. கணேஷ், இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உட்பட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் சிவில் அலுவலகத்திற்கான இணையத்தளத்தை இராணுவத் தளபதி ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டி வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

...நகர சபை, யாழ்ப்பாணம்!



## ஒறவது...

சமாபபித்த கடிதம் தொடர்பாக சபா நாயகரின் பணிப் பின பேரில் இந்த விடயம் குறித்து தெளிவுப்படுத்தப் பட்டுள்ளதாக தம்மிக கித்துல் கெட தமது கடிதத்தின் மூலம் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார். அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றுவ தற்காக மீண் டும் நாடாளுமன்றத் தை கூட்டு வதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்பை மீண்டும் பெற்றுக் கொடுக்க வேண்டுமென ஜோசப் மைக்கல் பெரேரா சபாநாய கருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத் தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எதிர்க் கட்சி உறுப்பினர்களு க்கு போதுமான அளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண் டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்ததாக ஜோசப் மைக் கெல் பெரேரா சபாநாயகருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## இராணுவ...

துள்ள நிலையில் புதிதாக தடுப்பு முகாம்கள் வர்த்தமானியில் பட்டியல் படுத் தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பில் நடை பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டம் எதிர்க்கட்சி உறுப்பி னர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தவும் ஆளும் கட்சி குண்டர்களுக்கு அடைக்கலம் வழங்கவும் பயன்படுத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் ஜனநாய கத்தை பாதுகாக்கும் நோக்கில் அவசரகாலச்சட்டம் அமுல் படுத்தப்படவில்லைஎன அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்வர்களை தடுத்துவைப் பதற்கு இராணுவ முகாம்களுக்குள் தடுப்பு முகாம்களை அமைத்துள்ளதன் மூலம் அடிப்படை உரிமை கள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி உயர் நீதிமன்றத் தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பு முகாம்களை அமைப்பதற் காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித் தல் அமுல்படுத்தப்படுவதை இடைநிறுத்து மாறு இடைக்கால உத்தரவொன்றைப் பிறப்பிக்கு மாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. (ச-3,5,9)

## மூவின மக்களின் அர்ப்பணிப்பாலேயே...

கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் கூறிய தாவது,

சுதந்திரத்திற்காக பாடுபட்ட இலங்கை தேசிய சங்கமும் அதில் அங்கம் வகித்த சேர் பொன் இரா மநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் போன்ற செம்மல்களின் அர்ப்பணிப்பும் போற்றப் பட வேண்டியது.

ஒரே தேசத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத் தவும் தெற்காசியாவில் இலங்கை முன்னிலை நாடாக வும் திகழ மக்களாகிய நாம், அழிவுப் பாதையி லேயே இட்டுச் செல்கின்ற இன, மத, பேத எண்ணக் கருத்துக்களை மறந்து செயற்பட்ட காலம் ஆகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒரே நேரத்தில் சுதந்திரத்தை அனுபவிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. பயங்கரவாத நிலை மைகளினாலும், வெடி குண்டுகளாலும் உயிர்களை யிழந்த இலங்கை மக்களாகிய நாம் அவ்வாறான ஒரு யுத்தத்தை முடிபுக்கு கொண்டு வந்துள்ளோம்.

30 வருடங்களுக்கு மேலாக குறிப்பாக 1971 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை நாட்டின் ஒரு மைப்பாட்டினையும் தேசிய உணர்வுகளை சீரழிக் கின்ற ஆயுதக் கலாசாரத்தையும் முடிபுக்கு கொண்டு வந்துள்ளோம்.

இவ் நோக்கில் உயிர் இழந்த சிங்கள, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் ஆயிரக்கணக்கில் அடங் குவர் அவயங்களை இழந்து வலுவிழந் தவர்கள், கணவர்மாரை இழந்து பரிதவிக்கும் விதவைகள், பெற்றோரை இழந்த சிறார்கள் ஆகியோரும் இவ்சமூகத் தில் அதிகமானோர் காணப்படுகின்றனர். இந்த நிலை மையை முடிபுக்கு கொண்டு வரு வதற்கு எங்களு டன் செயற்பட்டவர்கள் பெருமைக் குரியவர்கள்.

இன,மத வேறுபாடுகளை மறந்த எல்லோ ரையும் கட்டியணைக்கக்கூடிய ஊடகமாக மொழி முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இதற்கான உரிமைகளையும் அதிகாரங்களையும் பிரயோ கித்து குறுகிய அரசியல் நோக்கங்களை அடையும் முயற்சி முடிபுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரே நாடு ஒரேமக்கள் என்ற எண்ணக்கருவின் அடிப் படையில் வடக்கின் வசந்தம் என்ற சொத்தை அபி விருத்தி செய்வதற்கு யாழ்ப்பாண மக்கள் முனைப் புடன் உள்ளார்கள்.

இராமாவில் கைதடி போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட முகாம்களில் மக்களின் வசதி களையும் மீள்கட்டுமானம் செய்வதற்கும் வெடி களை அகற்றி மீள்குடியேற்றுவதற்கும் அவர் களுக்கான வீடுகளை கட்டியெழுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்காக இலங்கை பாது காப்பு தலைமைச் செயலகமும் யாழ். கட்டளைத் தளபதியும் விரைவாக செயற்படவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தெருப்போக்கு வரத்து சாவடிகளும் சிறு சோதனைச் சாவடிகளும் குறைக் கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. அதி உயர் பாதுகாப்பு நிலையங் களில் உள்ள வீடுகள் பயிர்ச்செய்கை நிலங்கள் போன்றன மக்களுக்கு மீண்டும் ஒப்படைக்கப் பட்டு உரித்தாக் கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை புற்றுநோய் வைத் தியசாலை தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை மக்களின் சேவைக்காக அதி உயர் பாதுகாப்புவலயத் தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழிலாளர்களின் பிரச்சினை களை நீக்கவும் பாதுகாப்பு இடையூறுகளை நீக் கவும் இலங்கை அரசும் பாதுகாப்பு அமைச்சும் நடை முறைகளை வகுத்துள்ளது. தமிழ் மக்களை பூர் வீக பிரஜைகளாக்கவும் இளைஞர் சமுதாயத்தை இவ் நிலையில் உருவாக்குவும் நிகழ்ச்சித்திட்டங் கள் உருவாக்கப்பட்டுள்ளது என இராணுவத்தளபதி ஜெத் ஜெயசூரியா மேலும் தெரிவித்தார். (ச-7)

## அவசரகாலச்...

பயங்கரவாதத்திலிருந்து விடுவிக் கப்பட்டு விட் டது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரகடனம் செய்து ஒரு வருடமாகின்ற நிலையில் தொடர்ந் தும் அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுவருவதற்கு அவசிய மில்லை என்று மனித உரிமைகள் அமைப் புக்கள் சுட்டிக்காட்டி வந்த போதும் நாடாளு மன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதிதனதுவிசேடஅதிகாரத்தைப்பயன்படுத்தி நாடாளு மன்றத்தைக் கூட்டி அவசரகா லச்சட்டத் தை நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நாடாளுமன்ற...

ஆதரவாளர்கள் பயணித்த பஸ் வண்டி தாக் கப்பட்டதை கண்டிப்பதாகக் குறிப் பிட்டார். மலையகத்தில் இடம் பெற்ற இத்தாக்கு தலினை ஆளும் அரச தரப்பில் அங்கம் வகிக்கும் மகிந்தானந்த அலுத்கமகேவே மேற் கொண்டதாகவும் அவர் குற்றம் சுமத்தி னார். (ச-5)

## அரசின் விரோத செயல்களினால்...

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கு இலங்கை விவகாரம் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் குழுவொன்றை அமைக்கும் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்புத் தெரிவிப்பதாக கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் தயா சிறி ஜயசேகர தெரி வித்துள்ளார்.

அரசாங்கம் ஏனைய தரப்பினர் மீது குற் றச்சாட்டுக்களை சுமத்துவதனை விடவும், தமது பிழைகளை திருத்திக்கொள்ள முனைப் புக் காட்ட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் சில செயற்பாடுகளின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.நா. தலைமைச் செயலர் இலங்கையில் போர்க்காலத்தில் இடம் பெற்ற தாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனைகளை கூறு வதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நிய மிக்கப்போவதாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலர் பான் கீ மூன் கூறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுடன் தான் நடத்திய தொலைபேசி உரையா டலின் போது இதனைத்தான் மகிந்த ராஜபக்ஷ விடம் வலியுறுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களின் நடமாட்டம் மற்றும் அவர்களது நிலைமை களில் முன்னேற்றத்தைக் காணுவது ஒரு அரசியல் நல்லிணக்கத்தை காணுவது மற் றும் நடந்த நிகழ்வுகளுக்கான பொறுப்புக் கூறும் நிலைமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக்காணு வது ஆகியவை தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசியதாகவும் பான் கீ மூன் தெரிவித்துள் ளார். (ச-5)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் தங்கேஸ்வரி

(பிரபல சோதிடர் காலஞ்சென்ற கு.சுப்பிரமணியம் அவர்களின் மனைவி)

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப் பிரமணியம் தங்கேஸ்வரி 07.03.2010 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (சோதிடர்) அவர்களின் அன்பு மனைவியும் உதயபாஸ்கரன் (இத்தாலி), மஞ்சுளா, வரதபாஸ்கரன் (சமூக சேவை அலுவலர் பிரதேச செயலகம், தென்மராட்சி), சுதேசபாஸ் கரன் (இலண்டன்), இராஜபாஸ்கரன், காஞ்சனா (நியூசிலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிரிஜா (இத்தாலி), சத்தியவரதன் (அதிபர் யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்), தயாழினி, சியாமினி (இலண்டன்), துஷாந்தினி, ஜெகதீசன் (நியூசிலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குமரன், குகப்பிரியன், ஜனகன், ரம் மியா, கம்ஷாயினி, தபீசன், திவ்வியா, சஞ்சீவன், நிருஜா, பிரகாஸ், கஜன், காருண்யன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 10.03.2010 புதன்கிழமை கட்டப்பிராயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
சு.வரதபாஸ்கரன் (மகன்)
ச.சத்தியவரதன் (மருமகன்)

பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய்.

(855)

## சந்தியாப்பிள்ளை அருட்பிரகாசம்

(மணற்காடு, குடத்தனை)



மணற்காடு, குடத்தனையை பிறப்பிடமாகவும் செம்பியன்பற்று வடக்கு செம்பியன்பற்றை வசிப் பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை அருட்பிர காசம் 07.03.2010 அன்று ஞாயிற்றுகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை மரியம் மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை ஆரோக்கியத்தின் அன்பு மருமகனும். மேரி புலோ மினாவின் அன்புக்கணவரும் அனஸ்ரீன், அற்புதராஜ் (றீகன், இத்தாலி), அலைக்ஸ்சனா (றீகனா, தெல் லிப்பழை புனர்வாழ்வு நிலையம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 11.03.2010 வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப் பலியுடன் மணற்காடு கல்லறைத் தோட்டத்தில் விதைக்கப்படும். இவ்வறித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணற்காடு
குடத்தனை

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(சி-4634)


நியூ சிற்றி ரேடேர்ஸ் இடமாற்றம்

சகலவிதமான வீட்டு வயரிங் வயர்கள் (ஏத்,மெயின், 1044), கோல்டர்கள், சுவிச்கள், (மெயின்,ரிப், பிளக்), பல்ப்கள் (2U,3U,40W,60W,100W, கரண்டி பல்ப்ஸ்), ரீயூப்லைற்கள், கிறைண்டர்கள், குக்கர்கள் (மண்ணெண்ணெய், காஸ், பிறசர், றைஸ்) கீற்றர்கள், கேற்றில்கள், சார்சர் ரோச் லைற்ஸ், சப்பிளைசர்கள், மின்விசிறிகள் (கூரை,மேசை, சுவர், பொக்ஸ்) மற்றும் மின்சார உதிரிப்பாகங்கள் அனைத்தையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி ரேடேர்ஸ்
319A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3226
(சி-4627)

தமிழர் விடுதலைக் கூட்டணி





வீ.ஆனந்தசங்கரி
1 X
வெற்றுக் கோசங்கள் வேண்டாம்
விழ்ந்த மக்களுக்கு கரம் கொடுப்போம்
ஏழாலை த.திருஞானசம்பந்தர் J.P
(Ret. Station Master)
3 X
(609)



பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2010
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
சாபத்தை தந்தவர்களின் தந்திரங்களை முறியடிப்போம்!
எங்களுக்குரிய கனவுகள் நிரம்பிய வாழ்வுக்காய் கைகொடுப்போம்!!
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சிவஞானம் சிறீதரன் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்
10 X
(சி-4571)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.